
# ஸ்ரீ குமரகுருபரர்



ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆம் ஆண்டு நிறைவு
88 மே முதல் 89 மே முடிய


தொகுதி - 10 பகுதி - 3

மார்கழி - 1 16—12—87

நமரங்காள்!

கண்ணில் சொலிச்செவியில் நோக்கும் இறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினும் — தண்ணளியால்
மன்பதை ஓம்பா தார்க்கு என்னும் வயப்படைமற்று
என்பயக்கும் ஆணல் லவர்க்கு.

— ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

வீரர்அல்லாத பேடிகளுக்குக் கையிலே வெற்றிதரும் வாட்படை இருந்தாலும் அதுஎன்ன பயனைத்தரும். ஒருபயனும் தராது. அதுபோல, தமது கண்பார்வையாலே தமதுகருத்தைப் பிறர்க்குச் சொல்லியும் ஒற்றர் சொல்வதைத் தமது செவியால் கேட்டு ஆங்காங்கே நடப்பதை நேரில் கண்டதுபோல அறிந்தும் கொள்ளும் அரச பதவி ஒருவர்க்கு முன்னை நல்வினைப் பயனால் கிடைத்ததே யாயினும், அவ்வரச பதவிக்கு ஏற்பக் கருணையால் குடிமக்களைப் பாதுகாவாதவர்க்கு என்னபயன் விளையும்?

# ஸ்ரீ குமரகுருபரர்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின் வண்ணம் வெளிவரும் சமய இலக்கியத் திங்களிதழ்.

சிறப்பாசிரியர்கள்

திரு. அ. ச. ஞானசம்பந்தன்
திரு. தா. ம. வெள்ளைவாரணம்

ஆசிரியர் குழு :

திரு. மு. அருணாசலம்
செந்தமிழ்க் கலாநிதி
திரு. கா. ம. வேங்கடராமையா
முதுமுனைவர்
ச. தண்டபாணி தேசிகர்
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்முதலியார்
திரு. க. வச்சிரவேல்முதலியார்
புலவர் திரு. கீரன்
டாக்டர் டி. பி. சித்தலிங்கையா
டாக்டர் கு. சுந்தரமூர்த்தி
பனசை. திரு. சுவாமிநாதன்

உள்ளே :

1 பெருமான் புகழ்
2 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் 300ஆம் ஆண்டு நிறைவு
3 ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்
4 இடமானவாழ்வுக்கு
5 ஸ்ரீ குமரகுருபரர் பற்றிய மதுரைக்கோயில் வரலாற்றுக் குறிப்பு
6 ஸ்ரீ குமரகுருபரரும் விநாயக வழிபாடும்
7 முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ்
8 300 th Anniversary of Sri Kumaraguruparar
9 ஆலயபூஜைப் படிக்காசுநிதி
10 ஸ்ரீகுமரகுருபரர் நெறிவிளக்கம்

பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் நிறைந்திடுக.
ஆங்கொன்றைக் கண்ணி மவர்'.



# பெருமான் புகழ்

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர்
"கயிலைமாமுனிவர்" ஸ்ரீ ல ஸ்ரீ

## காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

வெற்றிபெறுதலை யாவரும் விரும்புகின்றனர். அந்த வெற்றி முழுமையானதாக இருக்கவேண்டும். முறைமை யானதாகவும் இருக்கவேண்டும். அதற்கும் ஒருபடி மேலே சிந்தித்தால் "பின்னொரு காலத்தில் மாற்ற வியலாததாகவும் இருக்க வேண்டும்." என்ற உண்மை புலப்படும். போர்த் தொழிலால் ஒரு மன்னன் பிறிதொரு மன்னனை வென்ருன் என்று வைத்துக் கொள்வோம். அப்போர் அறங்காத்தற் பொருட்டு நிகழ்ந்தது என்றும் கொள்வோம். அப்போர், போரறங்களை முழுவதுமாகப் பின்பற்றியே நிகழ்ந்தது என்றும் கொள்வோம். மாற்ருர்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டதால் வெற்றி ஈட்டப்பெற்றது என்றும் கருதுவோம், என்ருலும் அது முழு வெற்றியாகாது. ஏனெனில் அவ்வெற்றி நிலைபேறுடையதன்று. வென்றவன், தோற்றவனின் மரபினனல் பிறிதொரு காலத்துத் தோல்வி யுறலாம். அல்லது பிறிதொருவனல் தோல்வியை எய்தலாம். இவ்வகையில் உலகியலின் எவ்வகை வெற்றியும் தோல்

வியும் சகடக்கால் ஆரம்போல மாறி மாறி மேலெழும் இயல்பினதே

வெற்றி என்ற சொல்லுக்கு இணையாக "வலம்" என்ற வேறொரு சொல்லும் இருக்கிறது. வெற்றி என்ற சொல்லைக் காட்டிலும் இச்சொல்லே அழுத்தமும் திருத்தமும் உடையதாகக் கருதலாம். "வியம்" என்ற சொல்லும் வெற்றியின் ஓரங்கத்தைக் குறிக்கும் சொல்லேயாகும்.

ஏவியது நிகழ்தலால் ஏற்படும் வெற்றிப் பெருமிதத்தை வியம் என்றும், தன்னுன் தானகத் தன்னெடு பிறராகப் போராடிப் பெறுதலே வெற்றி என்றும் பகுத்துக்கொள்ளலாம். இவை யாவற்றையும் உள்ளடக்கியும், இறையருள் ஒன்றுமே காரணமாகப் பெறுதலே வலன் அல்லது வலம் என்று கொள்ளலாம். வலன் என்பதற்கு வலிமை என்ற பொருளும் உண்டு 'எழுவர் நல்வலன் அடங்க" (புறம்) என்ற மேற்கோளில் அப்பொருள் உளதாதல் காண்க. அவ்வாறே வியம் என்ற சொல் பெருமிதம் என்னும் பொருளில் "வினைகடை கூட்ட வியங்கொண்டான் கங்குற் கனை சுடர்க் கால்சியா முன்" எனச் சிலம்பில் வருதல் காண்க.

முழுவலன் என்பது இறையருளால் மட்டுமே சிந்திப்பதாகும். நிறைவானதும் எக்காலத்தும் எவராலும் எவ்வகையிலும் மாற்ற இயலாததுமாகிய வலன் "முழுவலன்" எனப்பெறுவது. இறைவன் முழுவலத்தன். பொன்மன்று முழுவலத்தது. அவ்வலன் உடையவனே, அவ்வலன் உடையதே அஃது அருளவியலும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பொன்மன்றுக்கும் மன்றுறுடைய ஸ்ரீமந்நடராஜப் பெருமானுக்கும் ஆமாறு "முழுவலத்த மன்றுடையான்" என்றறிவித்தருளுகிறார்கள்.

அப்பெருமானின் கழுத்திலுள்ள மாலையை விரும்பிய பெண் அவனைக் கரும்பிடற்றன் என்கிறாள். செஞ்சடையன்

என்கிருள். வெண்ணீற்றன் என்கிருள்; மழுவலத்தன் என்கிருள்; மானிடத்தன் என்கிருள்.

இப்படியெல்லாம் அவள் சொல்லுவதிலே வருணனை வரிசை இல்லை என்றாலும், அவளின் புலம்பல் மனக் கருத்தின் வரிசையிலே வருகிறது. பக்தர்கள் கடவுளைப் பாதாதிகேசமாகவோ, கேசாதி பாதமாகவோ வருணிப்பார்கள். ஆன்றோர் செய்யுட்களைக் கூர்ந்து நோக்கின் கடவுள் வருணனைக்குப் பாதாதிகேச வருணனையும் மானுட வருணனைக்குக் கேசாதிபாத வருணனையும், சிறந்தது என்பதை உணரலாம்.

முழுவலத்த மன்றுடையான் தார்வேட்டமான், அவனைக் கருமிடற்றன் என முதலிலே கருதுகிருள். சிவனின் கருணைப்பெருக்கு விளக்கமாக அமைந்துள்ள நிகழ்ச்சி, திருப்பாற் கடலைக் கடைந்தபோது தோன்றிய நஞ்சை உண்டு அவன் கண்டம் கருத்ததாகும். வேண்டுவார் குறை முடிக்கும் விமலனின் தியாகத்தில் அவள் நெகிழ்ந்து போனுள். அடுத்த விநாடியே அந்த நிகழ்ச்சி அவன் மனத்திரையிலிருந்து மறைகிறது. காரணம், நஞ்சு உட்புகா வண்ணம் கண்டத்தில் நிறுத்தியவள் சக்தியாயிற்றே என்று சிந்தித்ததேயாகும்.

செஞ்சடையன் என்று அடுத்துச் சிந்திக்கிருள். அடுத்த விநாடியே அதுவும் மறைகிறது. கங்கையாள் குடிகொண்ட இடமல்லவா அது. எனவே வேறொன்றைச் சிந்திக்கிருள். இந்தச் சிந்தனை சொல்லாக "வெண்ணீற்றன்" என்று வருகிறது. வெண்ணீறணிந்தவன் அன்பும் பாசமும் அருளும் இன்னபிற குணங்கள் குடிகொண்டவனுக இருப்பானல்லவா என்று எண்ணும்போதே அவன் கையிலுள்ள மழுப்படை - கட்வாங்கதம் தெரிகிறது. இது போர்க் கருவியாயிற்றே, இதுபோது இவனிடம் காதலை எப்படியெதிர் பார்க்க முடியும்? என்ற கவலை அவளுக்கு வருகிறது. மழுப்படையை வலது கையிலே வைத்திருத்தல் தொழிற் படுநிலையல்லவா?

தன் வேட்கை, தோல்வியுறும் என்று அவளே கருதுதற்கேதுவாகிய வார்த்தையை இனியமைக்க கூடாதெனக் கருதிய ஸ்ரீ சுவாமிகள் சமத்காரமாக அவளைப் பேச வைக்கிறார். அவள் "மானிடத்தன்" என்றாள். அந்தச் சொல்லில் எவ்வளவு நயங்கள்! இவள் மானிடப்பெண். அவனும் மானிடத்தன். எனவே இவள் வேட்பது பொருத்தமே! இவள் தார்வேட்டமான். அவன் மான் கையிலே வைத்திருப்பவன். ஏவியமானை விடாமல் பற்றியிருப்பவன் விரும்பிவரும் மானை விடுவானா என்ன? மான் போன்ற உமையம்மையை இடப்பாகத்திற் கொண்டவன் என்றும் ஒருபொருள் கொண்டால் அதற்குமேல் அவள் பேச்சை நிறுத்திக் கொண்டது ஏன் என்ற ரகசியமும் புலப்படும்.

**"கருமிடற்றன் செஞ்சடையன் வெண்ணீற்றனென்னும்
மழுவலத்தன் மானிடத்தன் என்னும் - முழுவலத்த
மன்றுடையான் தார்வேட்ட மான்"**

என்பது சிதம்பரச் செய்யுட் கோவையின் 28 ஆம் திருப்பாடல் ஆகும். 27 ஆம் பாடலைப்போன்றே இப்பாடலும் தெய்வத்தை மானுடப் பெண் நயந்த பாடாண்திணையின் துறையாகும். ஐந்தெழுத்து மந்திர வடிவினன் ஆனமையால் ஐந்து வருணனைகளால் கூறினாள் எனக் கொள்ளலாம்

இத்திருப் பாடலின் கீழ் "இது பலவிகற்பத்து இன்னிசைச் சிந்தியல் வெண்பா. இதன் முதற்றொடை இரண்டாமெழுத்தின்மேல் நின்ற உயிர் ஒன்றத் தொடுத்தமையால் உயிரெதுகை. இதன் முதலடி இறுதிச் சீரொழித்து ஏனைமுச்சீரும் முரணத் தொடுத்தமையால் கூழை முரண்" என்னும் செய்யுள் இலக்கணக் குறிப்பு உள்ளது.

கரு, மழு, முழு என்பவற்றின் இரண்டாம் எழுத்துக் களின்மேல் நின்ற உயிர் "உ" என்பதாகும். அது முற்றிய லுகரமாதலின் உயிரென்றே குறிக்கப் பெற்றது. மூன்று எதுகை இடங்களிலும் மெய்யெழுத்துக்கள் ர், ழ் என்பன வாயினும் ஏறிய உயிர் "உ"கரமாதலின் இது உயிர் எனப் பெறுகிறது. உயிரெதுகை குணசாகரர் உரையால் உணர்த்தப் பெறுவது.

"உம்பர் பெருமாற்கு" எனத்தொடங்கும் இன்னிசைச் சிந்தியல் வெண்பா ஒருவிகற்பத்தது எனக்கோடல்பொருந் துவது என முன் கட்டுரையில் குறிப்பிட்டோம். கருமிடற்றன் எனத்தொடங்கும் இப்பாடல் உயிரெதுகை பெற்றது எனக் கொண்டால் இருவிகற் பத்ததாகும். அவ்வாருயின் தனிச்சொல் இரண்டாமடிக்கண் உள்ளதால் நேரிசைச் சித்தியல் வெண்பா என்ருகிவிடும் இந்நிலையில் உயிரெதுகை என்பதும் வருக்கம், நெடில் இனம் என்பன போன்ற எதுகைகளும் விகற்பங்காணலில் பலவாகவே கோடல் வேண்டுமென முன்னோர் கருதினர் ஆதல்வேண்டும்.

கரு - ஒருவிகற்பம் மழு, முழு - ஒருவிகற்பம் மன் - ஒருவிகற்பம் ஆக மூன்று விகற்பங்கள் எனினும் மூன்று எதுகைச் சொல்களிலும் இரண்டாமெழுத்தின்மேல் உயிர் ஒன்றி இருக்கிறது என்பது ஒரு நயமென்றே கொள்ளவேண்டும்.

"மறுதலைத்த மொழியான் வரினும் முரண்" என்பது இலக்கணம். மொழியான் வரினும் என்ற உம்மையால் பொருளான் வரினும் முரண் என விளக்கம் தருகிருர் குணசாகரர். இப்பாடல் முதலடியில் வரும் கரு, செம், வெண் என்பன முரண் தொடை இறுதிச் சீரொழித்து

எஞ்சிய மூன்று சீர்களிலும் முரண் தொடை உள்ளமை யால் (ஈறிலிகூழை) கூழை முரண் ஆகிறது.

மாறுபடு சொற்பொருள் மாறுபாட் டியற்கை
விளைவுதர உரைப்பது விரோதம் ஆகும்"

என இத்தொடையை அலங்காரமாக உரைப்பர் தண்டியார். அவரும் இதற்கு,

காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதால்
மேலை வினையெல்லாம் கீழவாம் — கோலக்
கருமான்தோல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

என ஸ்ரீமந்நடராஜப் பெருமானைக் குறித்தே உதாரணச் செய்யுட் செய்தமை நினைந்து இன்புறற்குரியதாகும்.

**சிவ சிவ**

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்

## 300-ஆவது ஆண்டு நிறைவு

ஸ்ரீகுமரகுருபர சுவாமிகள் சித்தாந்த பரமுத்தி எய்திய 300 ஆவது ஆண்டு நிறைவு விழா வரும் 1988 மேமாதம் முதல் 1989 மே மாதம் முடிய ஓராண்டுக் காலம் இந்திய அளவில் மட்டுமன்றிப் புல வெளி நாடுகளிலும் கொண்டாடப்பெறும்.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்னிதானத்தில் புரவலராக இருந்தருளும் அகில இந்திய விழாவுக்குழுவுக்குத் திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் 21 ஆவது அதிபர் கயிலை மாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் தலைமையேற்றருளியுள்ளார்கள்.

பெங்களூர் ஸ்ரீ வெங்கடேசா கல்விநிறுவனங்களின் நிறுவனர் செந்தமிழ்ச் செல்வர் கல்விக்காவலர் வித்துவான் டாக்டர் திரு. ம. வெ. **ஜெயராமன்** எம். ஏ. டி. லிட்., அவர்களும், திருச்சிற்றம்பலம் முதறிஞர் திரு. மு. **அருணசலம்** எம். ஏ. அவர்களும் அக்குழுவின் துணைத்தலைவர்களாவர். கலைமாமணி பேராசிரியர் திரு. அ. ச ஞானசம்பந்தன் எம். ஏ. அவர்களும், செந்தமிழ்க் கலாநிதி திரு. கா. ம. வேங்கடராமையா எம். ஏ., அவர்களும், திரு. டி. என். அருணசலம் பி. ஏ., பி. எல் அவர்களும் செயலாளர்களாவர். ம. வெ. பசுபதி, டாக்டர் இரா. செல்வக்கணபதி எம். ஏ., பி. எச் டி., ஆகியோர் துணைச் செயலர்கள். செயற்குழு உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல் அடுத்த இதழில் வெளியிடப்பெறும்.

8-11-87 அன்று தருமையாதீனத்தில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திற்குப் பல்வேறு நகரங்களிலிருந்தும் வந்திருந்த பெருமக்கள் பல அரிய கருத்துரைகளைத் தெரிவித்தனர், ஸ்ரீ வைகுண்டம், திருச்செந்தூர், திருநெல்வேலி, மதுரை, விருதுநகர்

இராமேஸ்வரம், திருச்சி, தஞ்சை, திருவாரூர், கும்பகோணம், மயிலாடுதுறை, வைத்தீஸ்வரன்கோயில், சீர்காழி, தில்லை, பெண்ணு கடம், சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் விழாக் கொண் டாட மெய்யன்பர்கள் மிக்க ஆர்வம் காட்டினர்.

பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள் ஆய்வுமலர் வெளியிட்டுப் பணியை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பேராசிரியர் திரு. பொன்னபலம் அவர்கள் வெளி நாடுகளில் ஸ்ரீ குமரகுருபரர் 300 ஆவது ஆண்டு நிறைவு வி ழா க் க ள் கொண்டாடச் செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். பேராசிரியர் திரு. தாணு அவர்கள் குமரிமாவட்டம் முழுவதும் விழாக்கள் நிகழ்த்தும் பணி களை மேற்கொண்டுள்ளார்கள். பேராசிரியர் திரு. வேலப்பப் பிள்ளை அவர்களும் பேராசிரியர் திரு. சிவசம்பு அவர்களும் நெல்லை மாவட்டத்தில் விழாக்களும் மற்றும் பல நினைவுப் பணிகளும் செய்ய முயற்சிகள் மேற்கொண்டுள்ளனர்.

திரு. நி. சி. சுந்தரராமன், திரு. தா. குருசாமி ஆ கி யோ ர் மதுரையில் பல்வேறு இடங்களில் விழாக்கள் நிகழ்த்தவும், நினைவு மலர் வெளியிடவும், ஸ்ரீ குமரகுருபரர் திருவுருவை ஒட்டுதற்கேற்ற வகையில் சிறப்புற வெளியிடவும் மற்றும் பல பணிகள் புரியவும் ஆவன செய்து வருகின்றனர்.

திருச்சியில் திரு. மூக்கப்பிள்ளையவர்களும், மற்றும் பல மெய் யன்பர்களும் இவ்விழாவைச் சிறப்புற நிகழ்த்தத் திட்டமிட்டு வருகின்றனர். தஞ்சை கல்வெட்டறிஞர் திரு. இராசு அவர்கள் ஸ்ரீ குமரகுருபரர் நூல்களின் பதிப்புக்கள், அவர் பற்றிய கட்டுரைகள் ஆய்வுகள் வெளியீடுகள் உள்ளிட்ட செய்திகளைத் திரட்டும்பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்திருந்த அன்பர்கள் ஏற்றுள்ள பணி விவரங்கள் தொடர்ந்து வெளியிடப்பெறும். கடிதம் வாயி லாகத் தெரிவிப்பவர்களின் செயற்பாடுகளும் அவ்வப்போது வெளியிடப்பெறும்.

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள்
# சரித்திரச் சுருக்கம்

தொகுத்தவர் : சு. இராமன் எம். ஏ., எம். பில்.

திருமக ளகலாப் பரமவை குந்த
நன்னக ருதித்த செந்நெறிக் குரிசில்
ஐந்தெனும் பருவம் வந்துறு மளவும்
மழக்குண மொருவி மிழற்றிடாச் செம்மல்
செந்திலம் பதிவாழ் கந்தன தருளால்
ஓதா துணர்ந்த போதனைய் முன்னர்க்
கலிவெண் பாவெனும் ஒலிபெறும் அலங்கல்அக்
குகன்திரு முடிதனக் குகந்திடச் சூட்டிப்
பிள்ளைக் கவிமுதல் வெள்ளைக் கிழத்தி
மாலையீ ருகச் சால்பமை பிரபந்தம்
முந்நான் கன்றியும் மொழிதரு கைலைக்
கலம்பகம் துண்டிக் களிற்றுப் பதிகம்
அவ்விரண் டியற்றிச் சைவநற் சமய
நிலையையும் காட்டி உலைவிலா தியாரும்
தீதெலாம் ஒருவி நீதியே புரிய
நீதிநெறி விளக்கமென் றேதமில் பனுவலும்
இயற்றினன் இல்லறம் தியக்குறு நிலையென

---

இச்சுருக்கம் டாக்டர் உ. வே. சா. எழுதிய சுருக்கத்திலிருந்தும் க. வ. திருவேங்கட நாயுடு இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் எழுதிய சுருக்கத்தினின்றும் திரட்டப் பெற்றது.

இளமையில் துறந்து வளமைசேர் தருமை
மாசிலா மணியெனும் தேசுறு குரவன்
பதமலர் பழிச்சுமற் புதகுண குமர
குருபரன் எனும்பெயர் மருவிய முனியே.

— தேவர் பிரான் கவிராயர் இயற்றியது.

"ஒன்பது கைலாசங்களும் ஒன்பது திருப்பதிகளும் தன் கரையில் அமையப்பெற்ற தாமிரபர்ணி நதியின் வடகரையில் ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கும் திருப்பதியின் வடபாலில் ஸ்ரீ கைலாசம் என ஒரு பகுதி உண்டு. அங்கே பரம்பரையாகத் தமிழ்ப் புலமையும் முருகக்கடவுளது பக்தியும் வாய்ந்த சைவவேளாள குலத்தில் சண்முக சிகாமணிக் கவிராயரென்ற ஒருவர் தம்மனைவியாரான சிவகாம சுந்தரி அம்மையாரோடு வாழ்ந்துவந்தார். அவ்விருவருக்கும் ஓர் ஆண் குழந்தை உதித்தது. அதற்குக் குமரகுருபரன் என்னும் பெயர்சூட்டி அவர்கள் வளர்த்து வருவாராயினர்."

"குமரகுருபரர் ஐந்தாண்டு வரையிற் பேச்சின்றி ஊமை போல இருந்து வந்தனர். அதுகண்டு நடுங்கிய பெற்றோர்கள் அவரைத் திருச்செந்தூருக்கு எடுத்துச் சென்று செந்திலாண்டவர் சந்நிதியிலே வளர்த்திவிட்டுத் தாமும் பாடுகிடந்தனர். முருகவேள் திருவருளால் குமரகுருபரர் பேசும் ஆற்றல்பெற்றுக் கல்வியிலும் சிறப்புற்றனர். செந்திற்பெருமான் திருவருளால் வாக்குப் பெற்ற இவர், அப்பெருமான் விஷயமாகக் கந்தர் கலிவெண்பா என்ற பிரபந்தத்தைப் பாடினர்." (உ. வே. சா)

"முருகக் கடவுளுடைய திருவடிகளைத் தியானித்துக் கொண்டு பிரதக்ஷிணம் செய்யும்போது அக்கடவுளுடைய திருவருளினால் ஆகாயத்திலே "அன்பனே நீ இவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு உத்தர யாத்திரை செய்யுங்கால் எவ்விடத்திலே உன்வாக்குத் தடைப்படுமோ அவ்விடத்திலே ஞானோபதேசம் பெறக்கடவை என்று ஓரசரீரிவாக்கு அங்கே சமஸ்தரும் கேட்கஎழுந்தது. அது கேட்டுக் குமரகுருபர சுவாமிகள் திருவுளம் மகிழ்ந்து திருவருளைப் புகழ்ந்து, நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து,

தம்மை ஆண்டருளிய அக்கடவுளிடத்தில் அநுமதி பெற்றுத் திருச்செந்தூரை அரிதினகன்று மாதா பிதாக்களோடு தமது ஜென்மஸ் தலமாகிய கைலாச புரத்திற் சென்று சுவாமிதரிசனம் செய்து கொண்டு சிலகாலம் வசித்திருந்தார். (இங்கு வசிக்கு நாளிலே அத் தலத்தைச் சுட்டிக் கைலைக்கலம்பகம் என ஒருபிரபந்தம் அருளிச் செய்ததாகவும் சரித்திரமுண்டு. அப்பிரபந்தம் கிடைக்கவில்லை.) பின்பு ஒருநாள் மதுரைக்குப் போகவிரும்பி, தமது தாய் தந்தையர்களுடைய பிரிவாற்றுமையைத் தேற்றி விடைபெற்றுத் தம்பியாராகிய குமாரகவிகளும் உடன்வரப் புறப்பட்டு வரும்போது, வழியிலே மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் என்னும் ஒரு அருமைப் பிரபந்தத்தைப் பாடி முடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தை அடைந்து சிவாமிதரிசனம் செய்துகொண்டிருந்தார்."

"அன்றிரவு மீனுக்ஷியம்மையார் மதுரையை யாளும் அரசராகிய திருமலைநாயக்கர் சொப்பனத்திலே தோன்றி 'நமது குமாரனுகிய சுப்பிரமணியனுடைய கிருபையைப் பெற்ற ஒருவன் நம்மைக்குறித்து ஓர் பிள்ளைத் தமிழ் முடித்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தில் வந்திருக்கிருன். நீ பரிவாரங்களோடு சென்று அழைத்துவந்து அப் பிள்ளைத்தமிழை நமது சந்நிதியில் அரங்கேற்றக் கடவாய்" என்று ஆஞ்ஞாபித்து மறைந்தருளினுர். உடனே திருமலைநாயக்கர் விழித்தெழுந்து குதூகலமடைந்து தாங்கண்ட சொப்பனத்தைச் சமஸ்தருக்கும் மற்றைநாட் காலையிலறிவித்து மிகுந்த மன மகிழ்ச்சியோடும் கைகளைச் சிரசிலே அஞ்சலி செய்துகொண்டு தமது பரிவாரங்களோடு திருப்பரங்குன்றத்திற் சென்று, சுவாமிகளைத் தரிசித்து, வணங்கி "யாவராலும் பெறுதற்கரிய திருவருளைப் பெற்ற சுவாமீ! தேவரீரை அடியேன் பூர்வத்திலே புரிந்த புண்ணியத்தினுல் தரிசிக்கப் பெற்றேன்" என்று துதித்து மீனுக்ஷியம்மையாருடைய ஆஞ்ஞையைத் தெரிவித்து, அவரையும், அவரருளிச் செய்த பிள்ளைத் தமிழையும் யானைமீதேற்றிக் கொண்டு மதுரையை யடைந்து நகர்வலம் செய்வித்தார். பின்பு குமர குருபர சுவாமிகள் திருக்கோயிலை அடைந்து சித்திவிநாயகக் கடவுளையும், சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்துத் துதித்துத் தொழுது மீண்டு மீனுக்ஷி அம்மையாருடைய சந்நிதியிற் சேர்ந்து, நமஸ்கரித்து, எழுந்துநின்ருர். அப்பொழுது சர்வலோகங்களையும்

பெற்றும் குமரியாகவே விளங்காநின்ற மீனாக்ஷி அம்மையார் தெய்வத்தன்மை பொருந்திய தமது இளந்திருக்கோலத்தைக் காட்டியருள சுவாமிகள் தரிசித்து, அடியேன்செய்த பிள்ளைத் தமிழுக்கு இது பரிசுபோலும் என்றெண்ணி அத்தியந்த ஆச்சரிய முற்று, தாமியற்றிய பிள்ளைத்தமிழைச் சந்நிதானத்திலே அரங்கேற்றுவாராயினர்.

அத்தருணத்தே ஆங்குள்ள சிவனடியார்களிலொருவர் பிள்ளைத் தமிழ்த் திருமுறையைப் பீடத்தி லெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்து வணங்கித்துதிக்க, குமாரகவிகள் அரசருடைய வேண்டு கோளின்படியே அதனைவாசிக்க, சுவாமிகள் அதன் பொருளை யாவரும் கேட்டு இன்புறும்படி விரித்துப் பிரசங்கித்தார். அத் தினத்திலே காப்புப்பருவம் ஒன்றே நடந்தது. சுவாமிகள் அவ் வாறே தினமும் ஒவ்வொரு பருவமாகப் பிரசங்கிக்கும் போது வருகைப் பருவத்தில் மீனாக்ஷி அம்மையார் அர்ச்சகரது பெண் குழந்தை போன்று இளந்திருக் கோலத்தோடு திருமலைநாயக்கர் மடியின்மீது எழுந்தருளியிருந்து “தொடுக்கும் ......... வருகவே” என்னும் ஒன்பதாவது செய்யுளை வாசிப்பித்துப் பொருள்உரைக்கும் தருணத்தில், “இன்னும் ஒருமுறை இச்செய்யுளை வாசிப்பித்துப் பொருள் உரைக்க” என யாவரும்மகிழ வினவி, கேட்டுவியந்து இறுதிச் செய்யுளை வாசித்து நிறுத்துந் தருணத்தில் மறைந் தருளினர்.[1]

அவ்வமையத்தில் திருமலைநாயக்கர் அருச்சகரது பெண்குழந்தை என்று அதுகாறும் தாம் எண்ணிக்கொண்டிருந்த எண்ணத்தை யொழித்து இங்ஙனம் எழுந்தருளியிருந்தவர் சர்வஜீவதயாபர ராகிய மீனாக்ஷி அம்மையாரே என்று தெளிந்து சுவாமிகளுக்கு அம்மையார் அருளிய திருவருளின் திறத்தைப் புகழ்ந்து கொண்

1) வருகைப்பருவத்திலன்றிமுத்தப் பருவத்திலே “காலத்தொடு .........முத்தம் தருகவே” என்னும் முதற் செய்யுளை வாசிப்பிசித்துப் பொருளுரைக்குங்கால் மீனாக்ஷி அம்மையார் இளந்திருக்கோலமாகக் காட்சியளித்து ஒரு முத்துவடம் சுவாமிகள் கழுத்திலணிந்து மறைந் தருளியதாகவும் சரித்திரம் உண்டு.

டாடினர். சபையாரும் அளவிறந்த ஆச்சரிய மடைந்தார்கள். இவ்வண்ணமே பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய பின்பு திருமலை நாயக்கர் சுவாமிகளைச் சிங்காதனத்தில் எழுந்தருளுவித்துத் திருவடிகளில் வீர கண்டாமணியைத் தரித்துப் பொன்னினாலும் அரதனத்தினாலும் அபிஷேகம் செய்து யானை குதிரை சிவிகைகளையும் குடை கொடி முதலிய விருதுகளையும் கொடுத்தார்.

அதன் பின்னரும் சுவாமிகள் திருமலைநாயக்கர் முதலியோர் வேண்டுகோளின்படி மீனாக்ஷியம்மை குறம், மீனாக்ஷியம்மை யிரட்டை மணிமாலை என்னும் இரண்டு பிரபந்தங்களைம், சோமசுந்தரக் கடவுளைத் துதித்து மதுரைக் கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தையும் அருளிச் செய்தனர். பின்பு ஒரு நாள், திருமலைநாயக்கர் வெகுநேரம் வரையில் போசனஞ் செய்யாதிருந்தமைகண்டு, சுவாமிகள், "வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி—தொகுத்தார்க்குந் துய்த்த லரிது[2]" என்னுந் திருக்குறளையெடுத்தோத: அரசருவந்து "அரிய திருக்குறளெனப்படும் தமிழ் வேதத்தை முற்றும் ஆராய்ந்து தெளிதற்குக் காலமில்லையாதலால், அதிலுள்ள நீதிகளை விளக்கிச் சுருக்கமாக அடியேன் பொருட்டு ஒரு நீதிநூல் செய்து தரவேண்டும்" என்று பிரார்த்தித்தனர். சுவாமிகள் அவ்வாறே நீதிநெறிவிளக்கம் என்னும் ஒருநூலை அருளிச்செய்து தந்து அவ்வரசர் வேண்டுகோளின்படி மீனாக்ஷியம்மையையும் சோமசுந்தரக் கடவுளையும் தரிசித்துக்கொண்டு, அத்தலத்திலே வதிந்தருளினர்.

சில நாட் சென்றபின்பு தமது சகோதரராகிய குமார கவிகளை வரவழைத்து, மாதாபிதாக்களனுமதியின் படியே, தாமவ்ரித்த கைலாசபுரத்திலே இல்லறதருமத்தில் வழுவாது நிற்கும்படி பணித்து, விடையளித்தனுப்பிவிட்டு, தாம் நானாவித வாத்தியங்கள் முழங்க, விருதுகள் புடைசூழ, தமக்கபிஷேகித்த திரவியங்களை அரசர் வேண்டுகோளின்படியே ஒட்டகங்களின் மீதேற்றிக் கொண்டு, மதுரையையகன்று, தம்மைப் பிரிவாற்றாது தொடர்ந்துவரும் அரசரையும், மந்திரிமார்களையும், பிறரையும் மீண்டு செல்லும்படி வற்புறுத்தி

---

2) திருக்குறள் 68 -ம் அதிகாரம், ஊழ் - 7

நாம் சிவிகை மேற்கொண்டு, பாண்டி நாட்டைக் கடந்து, சோழ நாட்டையடைந்து, அங்குள்ள திரிசிராப்பள்ளி, திருவானைக்கா முதலிய தலங்களிலுள்ள அடியார்கள் எதிர் வந்து பணியச் சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு, அவ்வத்தலங்களிலே சிலநாள் வசித்து திருவாரூரைச் சேர்ந்து, தியாகேசப் பெருமானைத் தரிசித்து, திருவாரூர் நான் மணிமாலை என்னும் ஒரு பிரபந்தத்தை அருளிச் செய்தனர். ஆண்டு வசிக்கு நாளில், திருக்கைலாச பரம்பரையாகிய தருமபுர வாதீனத்திலே[3] நான்காவது குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ மாசிலாமணித் தேசிக சுவாமிகளுடைய திருவருட் சிறப்பைக் கேள்விற்று, அவரைக்காண விரும்பிப் புறப்பட்டு, இடையிலுள்ள பல தலங்களையும் வணங்கிக் கொண்டு தருமபுரத்தை யடைந்தார்.

அத்தினத்திலே, சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், அவற்றிற்குரிய அங்கங்களாயுள்ள நூல்களையும், ஐயந்திரிபற ஓதியுணர்ந்து அவற்றிற் கூறப்படும் சரியை, கிரியை, யோகஞானுனுசந்தானங்களை மேற்கொண்டு, குருபத்தியிற் சிறந்து விளங்கும் அடியவர் திருக்கூட்டங்களும், வேத சிவாகம விற்பன்னர்களும் சைவாசாரியர்களும், இலக்கண விலக்கியங்களில்வல்ல வித்வான்களும் புடைசூழும்படி ஞான சூரியனைப் போல ஸ்ரீ மாசிலாமணித் தேசிகர் தக்ஷிணாமுகமாய் எழுந்தருளியிருந்தார். அச்சமயத்திலே சுவாமிகள் பரிசனங்கள் பின்னேவர, விருதுகளோடும் அத்திருமடத்தினுள்ளே சென்று, அவருடைய சந்நிதியிலே உத்தரீயத்தோடு ஆசனத்தின் மீதிருந்து கொண்டு, மாசிலாமணித் தேசிகரால் வினவப்பட்ட வினக்கள் பலவற்றிற்கும் உத்தரஞ் சொல்லிக்கொண்டு வந்தார். மாசிலாமணித் தேசிகர் திருப்புன் முறுவல் செய்து, இறுதியிலே

---

3) இத்தருமபுரவாதீனத்தின் பிரதம குருமூர்த்திகள் ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிகர்,

இரண்டாவது குருமூர்த்திகள் ஸ்ரீ ஆனந்தபரவச தேசிகர்,

மூன்றுவது குருமூர்த்திகள் ஸ்ரீ சச்சிதானந்த தேசிகர்.

திருத்தொண்டர் புராணத்தில்,[4] "ஐந்துபேரறிவுங் கண்களே ………… மகிழ்ச்சியின் மலர்ந்தார்." என்னுந் திருவிருத்தத்தின் அனுபவப்பயனை வினவ, வாக்குத் தடைப்பட்டது. உடனே சுவாமிகள் இருக்கைவிட்டெழுந்து, முருகக் கடவுளுடைய ஆஞ்ஞையை நினைந்து மனங்கலங்கி, ஆசனத்தையெடுத்தெறிந்து விட்டு, உத்தரீயத்தை இடையிலே கட்டிக்கொண்டு, சந்நிதானத்திலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து நின்று, அஞ்சலியஸ்தராகி, "எம் பெருமானே! ஆணவ மலத்தினாலே மறைக்கப்பட்ட தமியேன் அறியாமை யாற் செய்த பெருங் குற்றத்தை மன்னித்து, அடிமை கொண்டருள வேண்டும்." என்று பிரார்த்தித்து, வணங்கினர். அது திருச்செவியேற்ற ஞானசாரியராகிய மாசிலாமணி தேசிகர் அவரை நோக்கி, "நீ காசியாத்திரை முடித்து மீள்வையேல் அநுக்கிரகம் புரிவோம்" என்று வலிவுறுத்த, சுவாமிகள் பின்னும் பலமுறை வணங்கி, "கருணாநிதியே! சிறியேன் தேவரீருடைய கட்டளையின்படி, பசியினாலும், பிணி முதலியவற்றினாலும் வருந்திக் காசி யாத்திரையை முடித்துக்கொண்டு வருமளவும் தேக நிற்பதோ நிலையில்லை.; அன்றி இறக்கினும், பின்னரும் இம்மானுடப் பிறவியே வாய்த்துத் தேவரீர் திருவருட் பேற்றிற்குப் பாத்திரனாதலும் நிச்சயமில்லை; ஆதலால், அடியேனுடைய குற்றத்தைச் சிறிதும் திருவுள்ளத்திற் கொள்ளாது, திருவருள் பாலித்தல் வேண்டும்." என்று பிரார்த்தித்தார். பரங்கருணைத் தடங்கடலாகிய மாசிலாமணித் தேசிகர் திருவுளமிரங்கி. "அன்பனே, அது இயலாதாயின் சிதம்பர ஸ்தலத்தையடைந்து, சுவாமி தரிசனஞ் செய்துகொண்டு ஒரு மண்டலம் வசித்து வருவாயாக" என ஆஞ்ஞாபித்தருளினர்.

சுவாமிகள், அவ்வாஞ்ஞையைச்சிரமேல் வகித்து, அநுமதி பெற்று, சிவிகையிலாரோகணித்துத் திருப்புள்ளிருக்கு வேளூரையடைந்து, திருக்கோயிலினுள்ளே பிரவேசித்து, வைத்தியநாதசுவாமியையும் தையனாகியம்மையையும் முத்துக்குமார சுவாமியையுந் தரிசித்து, வந்தித்துத்துதித்து, அத்தலத்தின் எல்லையைக் கடந்து புறத்திற் செல்லும் போது; முத்துக்குமாரக் கடவுள், சுவாமிகளிடத்தில் அருச்சகர் வடிவமாக எழுந்தருளி விபூதி கொடுத்து

---

4) தடுத்தாட் கொண்டபுராணம் (106)

"நம்மைக் குறித்தும் ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக." என்று கட்டளையிட்டு, அந்தர்த்தானமாயினர். உடனே சுவாமிகள் இங்ஙனம் எழுந்தருளினவர் தம்மையாண்டருளிய முருகக் கடவுளேயென்று தேறி நிலத்திலே விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தெழுந்து மீண்டும் அத்திருப்பதியை யெய்தி எவ்வாறு பாடுவேனென்று' திகைக்குங்கால், அக்கடவுளுடைய திருவருளினல் "பொன் பூத்த குடும்" என்று ஓரசரீரிவாக்கு எழுந்தது. சுவாமிகள் அதனையே முதலாகக் கொண்டு, முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் "என்னும் பிரபந்தத்தைப்பாட ஆரம்பித்து செங்கீரைப் பருவம் பாடும் போது "செத்துப் பிறக்கின்ற தெய்வங்கண் ம ண வா ள ன்" எனவும். "தேனூறு கிளவிக்கு என்று தொடங்குகால் "வாயூறி நின்றவன்'' எனவும் இன்னவாகத் தெய்வகதியாய்ப் பிறர்பாளிகழ்ந்த சொற்களையும், இவையும் திருவருட்டிறம் போலும் என்று விடாதமைத்துப் பாடிமுடித்து அக்கடவுளுடைய சந்நிதியிலே பலருந்துதிக்கும் படி அரங்கேற்றிச் சிலநாள் அவ்விடத்திலே வசித்தார்.

பின்பு, சீர்காழியைப் பணிந்து, சிதம்பரத்தைச் சார்ந்து திரிகாலங்களிலும் வழுவாமல் சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு அமரு நாளில் சிதம்பர மும்மணிக்கோவை என்னும் ஓர் பிரபந்தமியற்றியருளினர். அந்நாளிலே, சுவாமி தரிசனத்துக்குப் பரிசனங்களோடு செல்லுந் தருணத்தில் வழியிலே தினந்தோறும் புராணப் பிரசங்கஞ் செய்து கொண்டிருந்த சைவாசாரியரொருவர் தவிர அது கேட்பவர் யாவரும் எழுந்து, மரியாதை செய்வார்கள். அவர்களுள்ளே ஒருவர் ஒருநாள் புராணிகரை நோக்கி, "ஐயா! புலவர் திலகராயும், சிவாநுபூதிப் பெருவாழ்வினராயும் விளங்காநின்ற சுவாமிகளைக் கண்டு தாங்கள் மாத்திரம் மரியாதை செய்யாதது என்னை?" என்று வினவ; அது கேட்ட புராணிகர் "அவர் இலக்கணகவியா? வரகவி தானே!" என்ருர். அது பொருத ஒருவர் சுவாமிகளுக்குத் திருச்செவி சாத்த; சுவாமிகள் திருப்புன் முறுவல் செய்து, "மிக முயன்று அரிதிற் பெறுவது இலக்கண கவியும், அவ்வாறன்றி எளிதிற் பெறுவது வரகவியுமன்ருே? இதையுணராதுரைப்பினும் அவர் சொல்லளவில் நம்மைத் துதித்தவரேயாயினர்; ஆயினும் அவர் சந்தேகத்தையும் நிவிர்த்தி செய்வோம்,'' என்று சிதம்பரச் செய்யுட் கோவை என்னும் ஓர் சிறந்த பிரபந்தத்தை

அருளிச் செய்தனர். புராணிகர் அந்நூலிலமைந்துள்ள அரிய இலக்கணங்களையும் சொற்சுவை பொருட் சுவைகளையும் நோக்கி, சுவாமிகளையடைந்து வணங்கி வேண்டிக் கொள்ளச் சுவாமிகள் திருவுளம் மகிழ்ந்து அளவளாவிய பின்பு, சிவகாமியம்மை யிரட்டை மணிமாலை என்னும் ஓர் பிரபந்தத்தையும் செய்தருளினர்.

இவ்வாறு நியதிபூண்டு ஒருமண்டலம் வசித்த, அத்தலத்தை அருமையாக நீங்கி, தருமபுரத்தைச் சார்ந்து, ஞானசாரியரைத் தரிசித்து வணங்கி, அவரைத் துதித்தியற்றிய பண்டார மும்மணிக் கோவையென்னும் பிரபந்தத்தை அவர்சந்நிதானத்திலே அரங்கேற்றினர். உடனே ஞானசாரியர் திருவுளமிக மகிழ்ந்து சுவாமிகளைநோக்கி, "நீ இயல்பாகவே துறவியாயினும் நமது வரன் முறைப்படியே அத்துறவிற்குரிய காஷாய வஸ்திர முதலிய முக்கிய சின்னங்களையும் தரித்துக்கொள்ளும்" எனப்பணித்து, அவரையடிமை கொண்டு அச்சின்னங்களையளித்து ஞானோபதேசமும் பாலித்தருளினர். சுவாமிகள்[5] அணுக்கத் தொண்டராகி அவ்வழி வசிக்கு நாளிலே ஒருநாள், தமக்குமுன்னே பரிசாகக்கிடைத்த திரவியங்களை அந்த ஞானசாரியர் சந்நிதியில் வைத்து ஏற்றருளும்படி பிரார்த்திக்க, அவர் முன்னர்ப் பணித்தவாறே "நீ காசியையடைந்து இவற்றைக் கொண்டு தருமமியற்றுக" என்று திருவாய் மலர்ந்தருளினர்.

சுவாமிகள் அவ்வரிய பணியை மேற்கொண்டு, அனுமதிபெற்று, அத்திரவியங்களை ஒட்டகங்களின் மீதேற்றிக்கொண்டு, பரிசனங்களோடு புறப்பட்டுத் தருமபுரத்தினெல்லையைக் கடந்து, சிவிகையில் ஆரோகணித்துச் சென்று, சிதம்பர முதலிய தலங்களை வணங்கிக் காஞ்சீபுரத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு வீற்றி

---

5) அணுக்கத் தொண்டராகி வசிக்கு நாளிலே அவ்வவ் வமையங்களில் "பூதங்கடந்த புகழ்க்கூடற் சம்பந்தன் போதித்த சொல், வாதங்கடந்து மனோலய மாயிந்து மண்டலம் போய், நாதங் கடந்து நடுவெளி தாண்டி தவர்சிறந்த போதங் கடந்தின்ப பூரண மாகிப் பொலிந்ததுவே" என்னும் இச்செய்யுள் முதலிய சில செய்யுள்கள் அருளியதாகவும் கூறுவதுண்டு.

ருக்கு நாளிலே, தம்மிடத்தில் அநேக வைஷ்ணவர்களோடு வந்து சமயக் கோட்பாட்டைப் பற்றி வாதித்த பிள்ளைப்பெருமாளையங்கார் முதலியோரைப் பல பிரபல நியாயங் கொண்டு வாதித்து, அவர்களை வென்று, அவ்விடத்தினின்றும் நீங்கி, இடையிலுள்ள திருக்காளத்தி முதலிய ஸ்தலங்களையிறைஞ்சிக் காசியென்னுந் திவ்விய தலத்தினெல்லையையணுகினர். அணுகியவுடன் சிவிகையினின்று மிறங்கிக் கங்கையை வந்தித்து, அதிலே ஸ்நானஞ்செய்து தமது நியதி முடித்து நோக்குங்கால், அக்கங்கையின் இருபுறத்தினுங் காடுகளடர்ந்து துருக்கர்களுடைய பள்ளியும் சமாதியுமே நிறைந்திருப்பதைக் கண்டு மனநொந்து, அன்றிரவு அருநித்திரை செய்தார். அப்போது அக்காடுகளால் மறைக்கப்பட்டிருந்த கேதாரத்திலெழுந்தருளிய சிவபெருமான் அவருக்குச் சொப்பனத்திலே தோன்றி, "நம்மைப் பூசிப்பாயாக" என்று ஆஞ்ஞாபிக்கச் சுவாமிகள் அவ்வாறே மற்றைநாட் பிராத முகூர்த்தத்திலே கேதாரத்தையடைந்து, காடுகளை அழிப்பித்து, அதனடுவே எழுந்தருளிய சிவபெருமானைப் பூசித்துத்துதித்து, பின்னர் விசுவநாதரை விசாலாக்ஷி யம்மையாரோடும் அருச்சித்து வணங்கி, காசிக்கலம்பகம் என்னும் ஓர் பிரபந்தத்தை அருளிச்செய்தார்.

அத்தலத்தில் வசிக்கு நாளிலே, அந்நகரத்தையாண்டு கொண்டு ஆங்கிருந்த டில்லி பாக்ஷாவைக் கண்டு வசனித்துத் தருமமியற்றுதற்குத் தக்க இடம்பெற விரும்பி, அவனுக்குரிய இந்துஸ்தானி பாஷையைத் தெரிவித்தருளும்படி சகல பாஷைகளிலும் வல்ல சரஸ்வதி தேவியைப் பிரார்த்தித்து, சகலகலாவல்லிமாலை என்னும் பிரபந்தத்திலே ஒன்பது பாடலருளியும், திருவருள் செய்யாமைகண்டு, "மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென் — பண்கண்டளவிற் பணியச்செய்வாய்" என்னும் பத்தாவது பாட்டை அருளிச்செய்தார். உடனே சரஸ்வதியார் திருவருள் சுரந்து அப்பாஷையை விளக்கியருளச் சுவாமிகள் களிகூர்ந்து அவ்வரசன் சமுகத்திற்கெழுந்தருளினர். அவன் சுவாமிகளுடைய அருமை பெருமைகளைச் சிறிதும் அறியாதவனாகையால் சிங்காதனத்திலிருந்து கொண்டே வரலாற்றைவினவ, சுவாமிகள் அதனாலே தமக்கு யாதொரு குறையும் இல்லையாயினும்,

அவனுக்கு நேரிடும் கெடுதியை யோசித்துக் கருணை கூர்ந்து, "மஹாராஜாவே உம்மை ஆசீர்வதிக்க வந்த நம்மை இப்படி நிறுத்திக்கொண்டு வினவுவது தருமமல்ல" என்று உரைத்தருளினர். அதுகேட்ட அரசன் "உம்மிடத்திலே தெய்விகங்கண்டாலன்றி உமது சரீரத் தோற்றத்திற்கு நான் மரியாதை செய்யேன்" என்று சொல்ல, சுவாமிகள் அப்படியாயின் அந்தநாளைக்குக் காட்டுவோம்" என்று சொல்லி மீண்டு மற்றைநாள் காளியினுடைய அனுக்கிரகத்தால் வந்த ஒரு சிங்கத்தின் மேலேறிக்கொண்டு, யாவரும் அஞ்சும்படி சபையிற்புகுந்து, அரசனை நோக்கி, "நீர் இருப்பது, உயிரற்ற சிங்கம்; நாமிருப்பது உயிருற்ற சிங்கம்; ஆயினும் நீர் அஞ்சவேண்டியதில்லை; உமக்கு மாத்திரம் இது பசுவாகத் தோன்றும்" என்றுசொல்லி அதிலிருந்தபடியே அவன் வினக்களுக்கு உத்தரங்கொடுத்து அவன் வணங்கும்படிச் செய்து அங்கே வீற்றிருந்தருளினர்.

அக்காலத்திலே அரசனையும் பிறரையும் சந்தோஷிப்பிக்கும்படி "நடத்திய பிரசங்கங்களுள்ளே சிற்றின்பத்தைக் குறித்துச்செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, துறவிகளாய் விருத்தப் பருவமடைந்துள்ள அரசனுடைய குரு முதலியோர்களும் விரகத்தினலே மயங்கிப் பூமியிலே விழுவார்கள். யுத்தவிஷயமாகச் செய்யும் பிரசங்கத்தைக் கேட்டு, வயோதிகர்களும் கண்சிவந்து பற்களைக் கடித்து, ஆயுதங்களை எடுத்துக்கொண்டு ஆரவாரிப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு விஷயங்களையும் பற்றிப் பிரசங்கிக்கும் பிரசங்கங்களினும் தாங்கள் அந்தந்தமயமாதலை யடைந்தும், சில துருக்கர்கள் மற்றவைகளைப் பற்றிச் சந்தேகியாமல் சிற்றின்பத்தைக் குறித்துச் செய்த பிரசங்கத்தில் மாத்திரம் சந்தேகமுடையராய், இவருக்கு அநுபவமில்லாமலே சாஸ்திரத்தால் இவ்விஷயத்தில் இவ்வளவு பேசமுடியுமாவென்று சுவாமிகளைநோக்கி, "இவர் பகற் சந்நியாசிபோலும்", என்பது முதலாகப் பலவாறு பிதற்றுவாராயினர்கள். அதுகண்டு சுவாமிகள் மிகவும் களிம்பேறிய ஒரு செப்புப்பாத்திரத்தை அழைப்பித்து, அவ்வாறு பிதற்றிய துருக்கர்களை நோக்கி, "நாளைக்கு இதை மருந்தில்லாமலே பொன்னுக்குதலாகிய ஒரு இரசவாதம் செய்வோம்" என்றுசொல்லி, அப்பாத்திரத்தை அவர்கள் காணும்படி மலத்திலே புதைப்பித்தார்.

மறுநாள் அரசன் முதலிய பலரும்வந்து கூடியபின்பு, அப் பாத்திரத்தை யெடுப்பித்துச் சுத்திசெய்வித்துப் பொன்னென எதிரே வைக்கக்கண்டு, முதனுள் ஆக்ஷேபித்த துருக்கர்களுட் சிலர், "இது இரசவாதத்தாலன்று, மலம் புளிப்பாதலால் இப் படிப் பிரகாசிக்கின்றது." என்ன, உடனே சுவாமிகள் அவர்களை நோக்கி, "நீவிர், மலம்புளிப்பென்றீர்களே, அதையும் புசித்து அநுபவித்தீர்கள் போலும்" என்ருர். அவர்கள் அது கேட்டு மிகவும் கோபங்கொண்டு சூழ, சுவாமிகள் அவர்களை நோக்கி, "நேற்றைக்கு இப்படிப்பட்டகோபம் நமக்கும் உண்டாயிருக்குமே!" என்று சொல்லினர். அப்பொழுது விவேகிகளாகிய அரசன் முதலாயினேர் அவர்களையடக்கி, சுவாமிகளுடைய புத்தியை வியந்து புகழ்ந்தார்கள்.

அத்துருக்கர்கள் முன்னையினும் மிக்க பொருமை யுடையவர்களாய் ஒருநாள் அரசனிடத்திலேவந்து, "உமது நண்பராகிய குமரகுருபர சுவாமிகள் சாஸ்திரங்களில் வல்லவ ரேனும் அவர் கைக்கொண்ட தெய்வமோ பொய்" என்ருர்கள். அதுகேட்ட அரசன் அதனைச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகள், உண்மையை யாவருக்கும் வெளிப்படுத்த விரும்பி, அத்துருக்கர்களுடைய உத்தேசப்படியே காய்ச்சப்பட்ட இரும்பைக் கொணர்வித்து, சைவசமயமே மெய்ச்சமயமானல், அச்சமயத்திற்குரிய சிவபெருமானுக்குப் பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுமே திருவுருவமானல், அவ்வெட்டனுள்ளும் அக்கினியே பிரதானமானல், இது சுடமாட்டாதென்னுங் கருத்தோடு அவ்விரும்பைத் தமது திருக்கரத்திலே ஏந்தியருளினர். அதுகண்ட யாவரும் அதியற்புத மடைந்து சிவபெருமானே பரம்பொருளென்று தெளிந்து, சுவாமி களைத் துதித்தார்கள். பொருமையதிகரித்துள்ள துருக்கர்களோ தங்கள் கருத்து முற்றுமையால் முகம்புலர்ந்து, தலைகவிழ்ந்துநிற்க, சுவாமிகள் யாதொருசலனமுமின்றி அரசனுடைய வேண்டுகோளின் படியே அந்த இரும்பை எறிந்துவிட்டுச் சபையிலே வீற்றிருந் தருளினர்.

பின்னொருநாள் அத்துருக்கர்கள் அரசனையடைந்து, "துறவிகளுக்குச் சாதிபேதங்கூடாது என்று சாஸ்திரங்களிலே சொல்லப்பட்டிருத்தலால் துறவியாகிய குமரகுருபர சுவாமிகளுக்கு நமது கிருகத்திலே போசனஞ் செய்விக்கவேண்டும்" எனக்கூறக்கேட்டு, அரசனும் அதற்குடன்பட்டவனாய்ச் சுவாமிகளுக்கு விண்ணப்பஞ் செய்ய. அதற்குமிசைந்து, தமது வேலைக்காரனொருவனை ஒரு தட்டிலே சில செவ்வரத்தம் பூக்களை வைத்து ஒரு வெள்ளைப் பரிவட்டத்திலே மறைத்துக்கொண்டு வரும்படி நியமித்துவிட்டு, தாம் முற்சென்று, அங்கே தமக்காகப் படைக்கப்பட்டிருந்த மாமிசங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியே வினவி, "பன்றி மாமிசம் ஒன்று மாத்திரம் தவறியது போலும்; ஆனால் அது நம்மிடத்திலிருக்கின்றது" என்று சொல்லி, வேலைக்காரன் கொண்டுவந்த தட்டை வாங்கும்படி கைநீட்ட; அம்மிருகத்தின் பெயரையுஞ் சொல்லாத துருக்கர்களோடு அரசனும் வெட்கப்பட்டு அதனைத் தடுத்தான். சுவாமிகள் அரசனைத் தம்வயமாக்க விரும்பி, அங்கே படைத்துள்ள மாமிசங்கள் அனைத்தையும் உற்றுநோக்க; அவைகளெல்லாம், காய், கனி முதலிய பலஅரிய தின்பண்டங்களாயின. அதுகண்ட அரசன் சுவாமிகளை வணங்கித் தனது குறையையிரந்து, "இனி அடியேன் செய்யவேண்டிய பணியாது?" என்று வினவ, சுவாமிகள், "உமது ஆளுகையிலுள்ள இக்காசிமாநகரத்தில் நாம் எண்ணிவந்த தருமத்தை நடாத்துதற்கு ஓரிடம் வேண்டும்" என்றார். அரசனும் "தேவரீருக்குப் பிரீதியான இடந்தருவேன்" என்று உடன்பட்டான்.

அன்றிரவு நித்திரை செய்யும்பொழுது கேதாரேஸ்வரர் சுவாமிகளுடைய சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே நீ அரசனிடத்திலே உபயகருடன் வட்டமிடுமிடத்தைக் கேள்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர். சுவாமிகள் விழித்தெழுந்து திருவருளைத் துதித்து, மற்றைநாள் உஷஸ் காலத்திலே கேதாரேஸ்வரரைத் தரிசித்துக்கொண்டு வெளியிலே வந்தபோது, அந்தக் கேதாரக்கட்டத்தின் அருகில் அரசனுடைய பள்ளிவாசலில் சிவாஞ்ஞைப்படி உபயகருடன் வட்டமிடக்கண்டு, திருவுளமகிழ்ந்து, அரசனிடத்திற்சென்று தெரிவித்தார். உடனே அரசன் யாதொருதடையுஞ் சொல்லாமல் அந்த இடத்தில் ஒரு பெரிய திருமடங்கட்டி, அதிலே தனது முகரும்வைத்து தத்தஞ் செய்து அவருக்கு வேண்டிய சிறப்புக்களையும் கொடுத்தான். இதுவே குமாரசாமிமடம் என்று சொல்லப் படுகின்றது.

சுவாமிகள் அத்திருமடத்திலே எழுந்தருளி யிருந்துகொண்டு, திருமலைநாயக்கர் கொடுத்த திரவியங்களைக்கொண்டு அவர் பெயரினால் ஒரு சத்திரங்கட்டுவித்து, தருமபரிபாலனஞ் செய்தமையேயன்றி, கேதாரநாதருக்கும் ஆலயமமைத்து, விதிப்படி நித்தியநைமித்தியங்களை ஏற்படுத்தி, காலந்தோறும் தரிசனஞ் செய்துகொண்டு அத்தலத்திலேயே வசித்திருந்தனர். ஒருநாள் தமது ஞானசிரியரைத் தரிசிக்க வேண்டுமென்னும் அன்பு அதிகரித்தலால் கேதாரநாதரையும் விசுவநாதரையும் தரிசித்து விடைபெற்று பிரஸ்தானமாகி, இடையிலுள்ள தலங்களை இறைஞ்சி, தருமபுரத்தின் எல்லையையடைந்து, சிவிகையினின்று மிறங்கி, திருமடத்தினுள்ளே சென்று, ஞானசாரியரைத் தரிசித்து வணங்கித்துதித்து, திருவருள்பெற்றுச் சில நாள் உடன்வசித்து, காசியையடைந்தனர். இங்ஙனம் மூன்று முறை வந்து தரிசித்துச் சென்றபின்பு நாலாவது முறையிலே ஞானசாரியருடைய சந்நிதியிலே நின்று, "இனி அடியேனுக்கு எம்பெருமானுடைய தரிசனத்தை விட்டு நீங்கிக் காசியிலிருக்க மனமில்லை." என்று விண்ணப்பஞ் செய்தனர். அப்போது ஞானசாரியர் பிரிவாற்றுமையால் வருந்தும் சுவாமிகளை நோக்கி,

"காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்கமலை
விட்டிருந் தான்டருள் ஞானப்ரகாசன் விரைமலர்த்தாள்
கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னும் கட்டளைக்கலித்துறையை அருளிச்செய்து, சொக்கலிங்கமூர்த்தியையும் மீனாக்ஷியம்மையையும் கிரியாபூசையாக எழுந்தருளப் பண்ணிக்கொடுத்து, திருவருள்பாலித்து விடையளித்தனர். சுவாமிகள் அவ்வாஞ்ஞையைச் சிரமேற்கொண்டு வணங்கி விடைபெற்று, அங்கே எழுந்தருளி விளங்கும் சொக்கலிங்க மூர்த்தியின் சந்நிதியிலே நமஸ்கரித்தெழுந்து அரிதினீங்கிக் காசியையடைந்து, அரிய சிவதருமங்களை இயற்றிக்கொண்டு சிவாநுபூதிச் செல்வராய்ச் சில காலம் வீற்றிருந்து, வைகாசி மாதத்திலே கிருஷ்ணபக்ஷதிருதியையிலே, சிவபெருமான் திருவடி நிழலிற் கலந்தருளினர்.

முற்றிற்று

திருச்சிற்றம்பலம்

குமரகுருபர சுவாமிகள் திருவடி வாழ்க.

# இதமான வாழ்வுக்கு எளிய வழிகள்

**சீதபேதி, ரத்தபேதி, வயிற்றுக்கடுப்பு இவைகளுக்கு மூலிகைச் சிகிச்சை:-**

1 மாந்துளிர் இளஞ்சிவப்பு நிறமாகவும் பட்டுப்போன்று மிருதுவாகவும் துவண்டு இருக்கும். இந்த இலைக்கொழுந்தை ஒரு பிடியும் மாதுளங்க இலைக்கொழுந்து ஒரு பிடியும் சேர்த்து அரைத்துச் சிறுவர்களுக்குச் சுண்டைக்காய் அளவும், பெரியவர்களுக்கு ஒரு நெல்லிக்காய் அளவும் காலை மாலை காய்ச்சிய பசும்பால், அல்லது மோர், தயிர் சேர்த்துக் கொடுத்துவர மேல்கண்ட வியாதிகள் குணமாகும்.

**நீரிழிவு வியாதியஸ்தர்களுக்கு மூலிகைச் சிகிச்சை:-**

2 மாந்துளிர் இலைகளைச் சேகரித்து உலர்த்தி இடித்துத் தூள்செய்து வைத்துக் கொண்டு தினந்தோறும் வெறும் வயிற்றில் காலையில் ஒரு தேக்கரண்டி தண்ணீரில் போட்டுக் கொதிக்க வைத்து ஆறிய பின்பு சாப்பிட்டுவர சிறுநீரில் உள்ள சர்க்கரைச் சத்துகள் குறைந்து போகும். அதிகமாக நீர் போவதும் நிற்கும்.

**கால் பாதங்களில் உண்டாகும் பித்தவெடிப்புக்களுக்குச் சிகிச்சை:-**

3 மாம் பிசினைக் கால் பாதங்களில் உண்டாகும் பித்த வெடிப்புக்களில் தடவினால் வெடிப்புக்கள் மறைந்து ரணங்கள் மாறும். சர்ம ரோகங்கள் சொறிசிரங்குகளுக்கும் மாம்பிசினுடன் எலுமிச்சம் பழரசம் சேர்த்துக் கலந்து மேலுக்குப் பூசுவதால் குணமாகும்.

Dr. N. சடையப்பன் S. M. P.

# ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்

( மாதப் பத்திரிகை )

பரபரப்பும் ஆரவாரங்களும் நிறைந்த தற்காலச் சூழ்நிலையில், மக்களுக்கு மனச்சாந்தியைத் தரும் அருமருந்தாக இந்தப் பத்திரிகை விளங்குகிறது.

தற்கால மக்களின் ஆன்மிகமறுமலர்ச்சிக்கு ஏற்ற வகையில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் குரலாக ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஒலிக்கிறது.

உங்கள் உள்ளம் உயர, நீங்கள் மேன்மையுற, அவசியம் படிக்க வேண்டிய பத்திரிகை இது.

உள்ளத்தைப் பண்படுத்தும் இந்து மதத்தின் சிறந்த கருத்துக்கள் உங்கள் குடும்பத்தினருக்கு எப்போதும் கிடைக்கச் செய்ய ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் பத்திரிகை ஆயுள் சந்தாதாரராகச் சேருங்கள்.

**சந்தா விவரம்**

| | |
|---|---|
| வருடச் சந்தா | ரூ. 22 |
| ஆயுள் சந்தா | ரூ. 250 |
| தனிப் பிரதி | ரூ. 2 |

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் காரியாலயம் தொலைபேசி

ஸ்ரீராமகிருஷ்ண மடம் 71959

மயிலாப்பூர் : சென்னை600 004. 71231

# ஸ்ரீகுமரகுருபரர் பற்றிய மதுரைக் கோயில் வரலாற்றுக் குறிப்பு

**முன்னுரை:**

" ஸ்ரீ குமரகுருபரர், திருமலைநாயக்கர் காலத்தில் வாழ்ந்தவர், திருமலைமன்னர் காலம் கி பி. 1623 — 1659 என்று முடிவாகியுள்ளது; மதுரை மீனாட்சிசுந்தரர் கோயில் ஓதுவார்பணிக்காகத் திருமலை மன்னர் தானசாசனம் செய்துகொடுத்த செப்புப்பட்டயம் ஒன்று என்னிடம் உள்ளது. கலியுகசகாப்தம் 4573 சாலிவாகன சகாப்தம் — 1544 என்று குறிப்பிட்ட அப்பட்டயம் திருமலைமன்னரால் தாண்டவமூர்த்தி ஓதுவார்க்கு ஓதுவார் செங்குளம் காணியாட்சி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 1963 கும்பாபிஷேக மலரில் பட்டயம் வெளியிடப் பெற்றுள்ளது.

**சிந்தனைக் குரியது:**

மதுரைக் கோயில் திருப்பணி விவரம் பற்றிப் பாடியபாடல்கள் திருப்பணிமாலை எனப்படும். அதன் ஒருபகுதியை மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் பாண்டித்துரைசாமித் தேவர் வெளியிட்டுள்ளார். அந்நூலைப் பாடியவர் தாண்டவமூர்த்திக் கவிராய ஓதுவார் என்பவர். அவர் திருமலைமன்னர் காலத்தில் வாழ்ந்தவர். புலமைத் திறத்தால் அவர் பட்டயத்தோடு விழாக் காலங்களில் திருவிளையாடற் புராணலீலைகள் சொல்வதற்கும், திருப்பணிமாலை விண்ணப்பிப்பதற்கும் திருக்கை வழக்கம் பெறும் உரிமை பெற்று வழி வழியினர்க்கும் ஏற்பாடு செய்துள்ளார். அவர் குமரகுருபரர் மதுரை எழுந்தருளிய போது வாழ்ந்தவர். அவரைப்பற்றி மதுரஞ் சுந்தரபாண்டிய ஓதுவார் என்ற என் பெரிய தந்தையார் 1940ஆம் ஆண்டு தேவஸ்தானத்தார் கேட்ட விளக்கத்திற்கு விரிவாக ஒரு முகாந்திரம் எழுதும் போது மேற்கோள் காட்டி குமரகுருபரரைச் சிந்திக்க வைக்கிறார்.

**ஆய்வுச் செய்தி:**

"குமரகுருபரர் திருஞானசம்பந்தரின் அவதாரம் போன்றவர் என்பதும், அவர் மதுரைக் கோயிலின் கொடிக் கம்பத்தில் முருகனுக்குப்பதில் திருஞானசம்பந்தரின் திருவுருவத்தை வைக்க ஆட்சேபனை சொல்லவில்லை என்றும், ஆதலால் அரசர் மாற்றுதல் செய்ய முடியவில்லை என்றும், பஞ்சபுராணம் பாடுதல் பிற்கால வழக்கு; பதிகம் ஓதுதலே முற்கால மரபு என்றும், ஆதலால் தேவாரம் மட்டும் தான் சிவாகமத்தில் ஓதப்படச் சொல்லியுள்ளபடி இக்காலத்திலும் ஓதப்பட்டு வருகிறது" என்ற வரிகள் ஆய்வுக்குரிய செய்திகளாகும். [1]

**கொடிக் கம்பம்:**

மதுரைச் சொக்கநாதர் சந்நிதிக்கு முன்னுள்ள கொடிக் கம்பத்தில் சுவாமியைப் பார்த்தவாறு திருஞானசம்பந்தர் இவனன்றோ என்று சுட்டிக்காட்டும் காட்சியோடு ஒரு கரத்தில் ஞானப்பால் அருந்திய பொற்கிண்ணத்தோடு காட்சி தருகிறார். மற்றுள்ள சிவாலயங்களின் கொடிக் கம்பங்களில் முருகன் தான் அமைந்திருக்கும். திருமலைமன்னர் காலத்தில் மதுரைக் கோயிலின் கொடிக்கம்பத் திருப்பணி முன்னிருந்தபடியே திருப்பணி செய்து முற்றியபோது சில மாற்றங்களை வைதிகர் சிலரின் யோசனைப் படி கோயில்ஸ்தானிகர்கள் மாற்ற முயன்றபோது குமரகுருபர சுவாமிகளின் யோசனையைக் கேட்டு முன்னிருந்தபடியே அமைத்த செய்தி இதனல் தெரியவருகிறது. இக்கோயிலின் நிர்வாகம் அபிஷேக பண்டாரம் என்பவரிடம் இருந்தது. அவரிடம் இருந்து கோயிலைப் பெற்றுத் திருப்பணி செய்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சி இது.

**அம்மன் கோயில் அறுகாற்பீடம்:**

திருவிளையாடற்புராணம் அரங்கேறிய இடம் சுவாமிகோயிலின் அறுகாற் பீடம்; மீனுட்சி பிள்ளைத்தமிழ் அரங்கேறிய இடம் அம்மன் கோயிலின் அறுகாற்பீடம்; இம்மண்டபம் திருமலை மன்னரால் நூதனமாகக்கட்டப்பட்டது. அம்பிகையே பிள்ளைத்தமிழ்ப்

---

1 Maduram Sundara Pandianar Explanation Letter 13 - 2 - 1940

பாடற்குப் பரிசு வழங்கிய கர்ண பரம்பரைச் செய்தி உண்டு. அம்மண்டபம் "பிள்ளைத்தமிழ் மண்டபம்" என்றும், குமரகுருபரர் பிள்ளைத்தமிழ்க்காகப் பெற்ற பரிசினை மீனாட்சிக் கோயில் நூதனப் பணிக்கு மீனாட்சி நாயக்கர் என்னும் அமைச்சரிடம் வழங்கித் திருப்பணியில் தலைநின்றார் என்றும் திருப்பணிமாலை கூறுகிறது

"உரிய பெரும் குருபரர் தமிழ்ப்பரிசு
உதவிடவே மீனாட்சி நாயக்கவேள்
பெரியகிரி போல மண்டபம் எழுப்பி" [2]

என்று கவிராயர் குறிப்பிடுவது இதுவரை வெளிவராத வரலாற்றுச் செய்தியாகும். பாட்டுக்கள் பின்பு வெளியிடப்படும்.

### குமரகுருபரர் திருவுள்ளம்

திருமலைநாயக்க மன்னர் காலத்தில் பெற்ற பெரும் பரிசினைக் குமரகுருபரர் முற்றும் எடுத்துச் செல்லவில்லை என்பதும், நடைபெற்றுக் கொண்டிருந்த திருப்பணியில் தம் பங்கையும் செலுத்தினர் என்பதும் அறியவரும் செய்தி என்பதோடு, திருவருள் வலத்தால் வந்தபொருளைத் திருவருளுக்கே செலவழித்த திருவுள்ளத்தையும் இதனல் அறியலாம். இதே மீனாட்சி நாயக்கர் காலத்தில் முற்றிலும் அம்பிகைபரமான மீனாட்சிபிள்ளைத்தமிழ் போன்ற தோத்திரங்களை ஓதவேண்டும் என்று வற்புறுத்தியபோது சத்தி சம்பந்தப்பட்ட திருமுறையே மீனாட்சி சந்நிதியில் விண்ணப்பம் செய்யவேண்டும் என்றும், விலக்காக பிள்ளைத்தமிழ் போன்ற பிரபந்தங்களை ஓதலாம் எனவும் முடிவு செய்யப்பட்ட செய்திகளை மதுரைக் கோயில் திருமுறைவாணரும், தமிழறிஞருமான மதுரஞ் சுந்தர பாண்டியனர் மதுரைக்கோயில் நிர்வாகிகள் கேட்ட தடை விடைகட்கு 1940 ஆம் ஆண்டு எழுதிய முகாந்திர விவரக கடிதம் விவரிக்கின்றது.

### முடிவுரை:

செப்புப் பட்டயம் தற்சமயம் என்னிடம் உள்ளது. தாண்டவமூர்த்தி ஓதுவார் பட்டயம் பெற்றவர். அதற்கு முன்பே அலங்கார ஓதுவார் என்பவர் கமலைஞானப்பிரகாசரின் தங்கை சிவகாமி

---

2. இம்மண்டபம் மீனாட்சி நாயக்கர் மண்டபம் என வழங்குகிறது. — திருப்பணி மாலை — கைப்பிரதி

அம்மையாரின் குமாரராகிய அவரை விசுவநாத நாயக்கர் காலத்தில் திருமுறைப்பணிக்காக திருவாரூரில் இருந்து அழைக்கப் பட்டு, பாண்டியர் காலத்தில் ஓதுவாராக இருந்த மரபினர்கள் கோயில் நிர்வாகத்தில் தலைப்பட்டு திருமுறைமரபு மறந்து விட்டார்கள் என்பதும், அதற்காக விடப்பட்டிருந்த சித்தாலங்குடி ஓதுவார் மானியம் வருமானத்திலிருந்து, அவர்கள் கொடுத்த பொருள் கொண்டு நடைபெற்ற திருமுறைப்பணி திருமலை மன்னர் காலத்தில் திருவாரூரில் இருந்து வந்த ஓதுவார் மரபினர்க்குத் தனியாக தானசாசனம் தந்தார் என்பதும், அச் சாசனக்காலம் திருமலைமன்னர் காலத்தை வரையறை செய்கிறது என்பதும், தாண்டவமூர்த்திக் கவிராய ஓதுவார் குறிப்புப் பற்றி மதுரஞ் சுந்தரபாண்டிய ஓதுவார் குறிப்பேடுகள் (Statement and letters) குமரகுருபரர் பற்றிய செய்திகளை அறிய உதவுகிறது என்பதும், இதுபற்றிய ஏனைய விவரங்கள் ஸ்ரீ குமரகுருபரர் இதழில் தொடர்ந்து எழுதப்படும் என்றும் விண்ணப்பித்துக் கொள் கின்றேன்.

வித்துவான் தா. குருசாமிதேசிகர்
மதுரை


Phone No : 222 "Tel Add. "JEWELLERY"
PT.N. G. S. T. No: 209126. Post Box. No. 14
I No. 8/77. Residence Phone No: 622

தரம் மிக்க தங்க நகைகளுக்கு

**ஸ்ரீநடராஜ விலாஸ்**
**ஜுவல்லரி ஹால்**
**சிதம்பரம்**

முகவரி

ச. ரெத்தினசாமி செட்டியார் சன்ஸ்
உரிமையாளர்கள் :

நடராஜ விலாஸ் ஜுவல்லரி ஹால்
26, 27,28, கடைத்தெரு, சிதம்பரம்
தென்னார்க்காடு மாவட்டம்—608 001

# ஸ்ரீ குமரகுருபரரும் விநாயக வழிபாடும்

ம. வே. பசுபதி

எடுப்பு:-

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்கள் மொத்தம் பதினாறும். அவற்றுள் கைலைக்கலம்பகம், துண்டிவிநாயகர் பதிகம் என்னும் இரு நூல்களும் தற்போது கிடைக்கப்பெறவில்லை. அந் நூல்களை ஸ்ரீ சுவாமிகள் இயற்றியருளினர்கள் என்பதை கைலைக் கலம்பகம் துண்டிக் களிற்றுப்பதிகம் அவ்விரண்டியற்றி என்னும் தேவர்பிரான் கவிராயர் பாடல் தொடரால் அறியலாம். கயிலைக் கலம்பகம் என்னமல் கைலைக்கலம்பகம் எனக்குறிப்பது ஸ்ரீ வைகுண்டத்துள்ளது என உணர்த்துதற்காகலாம்.

தற்போது கிடைக்கும் பதினன்கனுள் எட்டுநூல்களில் விநாயகக் கடவுள் துதி உள்ளன. திருச்செந்தூர் கந்தர் கலிவெண்பா, நீதிநெறிவிளக்கம், சிதம்பரச் செய்யுட்கோவை, சகலகலாவல்லிமாலை, மதுரைமீனட்சியம்மை இரட்டைமணிமாலை, தில்லைச்சிவகாமியம்மை இரட்டைமணிமாலை என்னும் ஆறுநூல் களில் விநாயக வணக்கப்பாடல் காணப்பெறவில்லை. இதன் காரணங்களைப் பின்னர்க் காண்போம்.

விநாயக வணக்கப்பாடல்கள்:-

மீனட்சியம்மை பிள்ளைத்தமிழ், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ஆகிய இருநூல்களிலும் விநாயக வணக்கம் முதலில் நூல் முட்டின்றி முடிவதற்காகவும், காப்புப்பருவத்தில் தலவிநாயகர் குறித்தும் உள்ளன. மீனட்சியம்மை பிள்ளைத்தமிழில் விநாயகரின் அருள் ஆடல் தனியொரு பாடலாகவும் உள்ளது.

மதுரைக் கலம்பகம், திருவாரூர் நான்மணிமாலை, சிதம்பர மும்மணிக்கோவை, பண்டார மும்மணிக்கோவை, மீனட்சியம்மை குறம் ஆகிய நூல்களில் நூல்முட்டின்றி முடிய விநாயகவணக்கம் அமைக்கப்பெற்றுள்ளன.

காசிக் கலம்பகத்து விநாயக வணக்கப் பாடல்மட்டும் நூல் முட்டின்றி முடிதலைவேண்டாது பொதுவாக விநாயகரைத் தோத் தரிப்பதாக உள்ளது. அப்பாடல் வருமாறு:-

"பாசத் தளையறுத்துப் பாவக் கடல்கலக்கி
நேசத் தளைப்பட்டு நிற்குமே — மாசற்ற
காரார் வரையீன்ற கன்னிப் பிடியளித்த
ஓரானை வந்தென் உளத்து"

சிலதெளிவுகள்:-

திருவாரூர் நான்மணிமாலையின் விநாயகவணக்கப் பாடலுள் "நாடும் கமலேசர் நான்மணிமாலை" என்றும் மதுரைக்கலம்பகத்து விநாயக வணக்கப்பாடலுள்,

"புந்தித் தடத்துப் புலக்களிறு ஓடப் புளிறு தொந்தித் தந்தைக்குத் தந்தை தமிழ்க்கு உதவ" என்றும் வரும் தொடர் களைச் சிந்தித்து நோக்கும்போது அந்நூல்களுக்கு முறையே "கமலேசர் நான்மணிமாலை" "சொக்கநாதர் கலம்பகம்" என்ற பெயர்கள் சூட்டப்பெற்றிருந்தன எனக் கருதலாம்.

பாடல் வகைகள்:-

பண்டாரா மும்மணிக்கோவை, திருவாரூர் நான்மணிமாலை சிதம்பர மும்மணிக்கோவை காசிக்கலம்பகம் ஆகிய நான்கு நூல்களின் விநாயக வணக்கப் பாடல்கள் வெண்பாக்களால் ஆனவை. மதுரைக் கலம்பகத்து விநாயக வணக்கப் பாடல் கட்டளைக் கலித்துறைப் பாடலாகும். எஞ்சின ஆசிரிய விருத்தங் களாலானவை.

விநாயகரின் பெருமைகள்:-

விநாயகர், சிவபெருமானின் அங்கமெலாம் உள்ள திருநீற்றில் படிந்து விளையாடும் இயல்பினர். அதனல் இப்பெருமானின் திருமேனி வெள்ளையாக இருக்கும். அந்நிலையில் இரண்டாயிரம் கொம்புகளுடைய அயிராவணம் என்னும் சிவபெருமானின் வெள்ளை யானை போல் இருப்பார். மேகம்போல மதநீர் பெருகும்; சிவபெரு மானைப் போலவே மூன்று கண்கள் அவருக்கு உள்ளன. அக் கண்ணின் கனலை அவிப்பதற்காகவும், மதநீர்ப் பெருக்கைத் தடுப் பதற்காகவும், தாமரை இலைபோன்ற பெரிய செவிகள் அசையும்.

விநாயகர் "போர்க் களிறு" எனப்பெறுகிறார். மதநீர்க் கடலில் குளித்து அடியார் மனமாகிய கட்டுத்தறியில் கட்டுப்படுபவர் விநாயகர். உமையம்மையின் கொங்கைக்குடம் கொட்டும் மதுர அமுது உண்டு மிஞ்சியபால் விநாயகரின் வாய்வழியே வெள்ளை அருவியென வீழும். விநாயகரின் தந்தங்களில் பூண் இருக்கும் - அத் தந்தங்கள் நிலவைப் பொழியும். அத்தந்தங்களால் மலைகளையே இடிப்பார். ஏழுகடல்களையும் கைகளால் முகப்பார். பிறகு தன்மத நீரால் கடல்களை நிரப்புவார். கூனல்மதியை அங்குசம் என்று கருதி விண்ணைத் தடவுவார். நட்சத்திரங்களுடன் உலவும் மேகங்களை முத்துக்கள் பதித்த போர்வை என்று கருதி எடுத்துச் சுற்றிக் கொள்வார். மதநீர் பொருந்தியவர். மிகவும் இளைய யானைக்கன்று வார். உமையம்மை ஈன்ற கன்றுவர்.

புலத்தின்வழி மனம் செல்லுதலை அறிவிலே நின்று தடுப்பவர் விநாயகர். பெருவயிறு உடையவர். சித்தி விநாயகரின் திருவடியை வந்தித்து, வாழ்த்தி, சிந்தித்தால் மனத்தை நிலைநிறுத்துவார்.

துதிக்கையை உடையவர் விநாயகர். முக்காலத்தும் மனத்தின் நினைப்பவர்க்குப் பிரத்யட்சமாவார். கவிதைபாடும் வல்லமையைத் தருவார்.

இமவான் மகள் கயிலாய யானையைக் 'கூடிப்பெற்ற, சிறிய கண்ணையும், பெரியசெவியையும்உடைய இளைய யானைக்கன்று எனப் பெறுபவர் விநாயகர்.

தாமரை மலர்போன்ற ஐந்து திருக்கரங்களை உடையவர் விநாயகர். அவரைத் திருமாலும், பிரமனும், இந்திரனும் போற்றித் துதிப்பார்கள்.

யானை முகத்தை உடையவர் விநாயகர். திரிபுர தகனத்தின் போது சிவபெருமானே இவரைப் போற்றினர். மும்மூர்த்திகளுக் கும் இவர் அருள் செய்தார்.

பாசமாகிய கட்டினை விநாயகர் அறுத்துவிடுவார். பாவமாகிய கடலைக் கலக்கிவிடுவார். அன்புக்குக் கட்டுபடுவார். பெண்யானை யாகிய தாட்சாயணியின் பிள்ளையாகிய ஒப்பற்ற யானை விநாயகரே யாவார்.

விநாயகரின் முகம் புள்ளிகளையுடையது. ஒரு கொம்பு, இரு செவி. மும்மதம், நால் (தொங்கும்) வாய், ஐங்கரம் உடையவரவர். மதநீர் பெருக்குபவர் சிறுகண் கொண்டவர்.

—இத்தனைக் கருத்துக்களையும் விநாயகரைப் பற்றிய செய்திகளாக ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் தம் பிரபந்தங்களுள் அருளியுள்ளார்கள்.

**சில சிந்தனைகள்:-**

ஸ்ரீ சுவாமிகள் அருளிய பிரபந்தங்களுள் இரண்டாவது பிரபந்தம் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ஆகும். அதில் வரும் விநாயக வணக்கப் பாடல்கள் விநாயகரை இளைய விளையாட்டுப் பிள்ளையாகவும், அம்பிகையையே காப்பவராகவும் காட்டுகின்றன. வேளூரில் இயற்றிய பிள்ளைத்தமிழில் வரும், முருகனின் ஆடல்களுக்கு இப்பாடல்கள் வித்திட்டவை எனலாம்.

எல்லாப் பாடல்களையும் தொகுத்துக் காணும்போது விநாயகரின் முழுவடிவும் வருணிக்கப் பெற்றிருப்பதை அறியலாம்.

மும்மூர்த்திகட்கும் அவர் அருள்புரிபவர். உமை, முருகன் ஆகியவர்களைக் காப்பவர் என வருவதால் விநாயக வழிபாட்டை அழுத்தமாக ஸ்ரீ சுவாமிகள் வலியுறுத்தியிருக்கிறார்கள் என்பதை உணரலாம்.

இருபது பாடல்கட்கு மேற்பட்ட நூல்கட்கே விநாயக வணக்கம் அமைத்துள்ளார்கள். கந்தர் கலிவெண்பா, இரண்டு இரட்டை மணிமாலைகள், சகலகலாவல்லிமாலை ஆகியவற்றிற்கு நூல் முட்டின்றி முடிய விநாயக வணக்கம் பாடாமைக்குக் காரணம் இதுவே எனலாம்

நீதிநெறி விளக்கம் குறளின் சாரம் ஆதலால் குறளில் கூறும் ஆதிபகவன் ஸ்ரீ மந்நடராஜப் பெருமானே எனக் காட்டுதற்காக முதற்பாடலில் விநாயக வணக்கம் கூறவில்லை.

ஒரே கடவுளுக்குத் தமிழின் அனைத்துவகைப் பாடல்களையும் அர்ப்பணிக்கும் நோக்குடன் புனையப்பட்டதாதலின் சிதம்பரச் செய்யுட் கோவையிலும் விநாயக வணக்கம் பாடப்பெறவில்லை.

விநாயகர் அன்புக்குக் கட்டுப்படுபவர்; மனத்தில் உறைபவர்; தியானத்திற்கு உரியவர்; எல்லார்க்கும் அருள்புரிபவர் என்ற கருத்துக்களைப் பரவலாகக் கூறியுள்ளமையால் ஸ்ரீ சுவாமிகள் விநாயக வழிபாட்டில் பெரிதும் ஈடுபாடுடையவர்கள் என்பது புலனாகும்.

துண்டி விநாயகர் பதிகமும் கிடைத்திருப்பின் மேற்கூறிய கருத்துக்களின் உண்மை மேலும் வலிவுடையதாயிருக்கும்.

# ஸ்ரீ குமரகுருபரர் பிரபந்தங்களில் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

**முன்னுரை :**

"என்றுமுள தென்தமிழ்" — என்ற ஆன்றோர்களின் வாக்கிற்கு ஏற்ப ஆதியும் அந்தமும் இல்லாது விளங்குவது நம் செந்தமிழ் மொழி. உலக மொழிகளிடையே உயர் தனிச் செம்மொழியாய்ச் செம்மாந்து விளங்குவது. இடைக்காலத்தில் தோன்றிய இலக்கியச் சோலையில் (நூல்மலர்கள் மலர்ந்தன. அங்ஙனம்) மலர்ந்த 96-வகை சிற்றிலக்கிய மலர்களுள் ஒன்றாக விளங்குவது பிள்ளைத்தமிழ். அப்பிள்ளைத்தமிழ் நூல்களுள் தனிச்சிறப்புடன் திகழ்வது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழாகும். இதனை இயற்றியருளியவர் குமரனின் கடைக்கண் அருளால் திருவாக்குப்பெற்று ஞாலமெல்லாம் பக்திப் பேரொளி வீசித்திகழ்ந்த அருள்தரு குமரகுருபர அடிகளாவர். அடிகள் அவர்கள் அழகின் உறைவிடமாக விளங்கும் முருகப்பெருமானின் பேரெழில் நலத்தையும், திருவிளையாடல்களையும் மற்றும் பற்பல சிறப்புக்களையும் பக்திப்பரவசம் மீதூரப் பாடியுள்ளார். இறையருள் பெற்ற அத்தெய்வப்புலவரின் நூலின்கண் உள்ள ஒரு சில கருத்துக்களைத் தொகுத்துக்காட்ட முயல்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பிள்ளைத்தமிழ் இலக்கணம்:**

(இவ்விலக்கியத்தின் இலக்கணத்தை) தொல்காப்பியர் "குழவி மருங்கினும் கிழவதாகும்" என்ற நூற்பாவில் வகுத்துள்ளார் கடவுளரையேனும், ஆசிரியரையேனும், வள்ளல்களையேனும் குழந்தையாக வைத்து காப்பு முதலிய பத்துப் பருவங்கள் அமைத்துப் பாராட்டிப்பாடுவது "பிள்ளைத்தமிழ்" என்று கூறப்படும். இப்பிள்ளைத்தமிழின் முதல் ஏழு பருவங்கள் ஆண், பெண் ஆகிய இருபாலாருக்கும் பொதுவாக உள்ளன. அவை காப்புப் பருவம், செங்கீரைப் பருவம், தாலப் பருவம், சப்பாணிப் பருவம், முத்தப் பருவம், வருகைப் பருவம், அம்புலிப் பருவம் என்பன. பின்வரும் 3-பருவங்கள் ஆண்பாலராக இருந்தால் சிற்றில், சிறுபறை, சிறுதேர் எனவும், பெண்பாலராக இருந்தால் அம்மானை, ஊசல், நீராடல் எனவும் அவரவரது வளர்ச்சிக்குத் தக்கமுறையில்

அமைக்கப்பட்டுள்ளன. இந்நூல் ஆண்பால் பிள்ளைத்தமிழாகும். பாட்டுடைத் தலைவன் புள்ளிருக்கு வேளூரில் கோவில் கொண்டுள்ள முத்துக்குமார சுவாமி கடவுள் ஆவர். இப்பிள்ளைத் தமிழில் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்னும் பத்துப் பருவங்களும் முறையே அமைந்துள்ளன. விநாயகர் துதியுடன் 101 - திருப்பாடல்கள் உள்ளன.

நூலாசிரியர்:

குமரகுருபரர் திருநெல்வேலி மாவட்டத்தில் ஸ்ரீகைலாசம் என்னும் திருப்பதியில் சைவவேளாளர் குலத்தில் அவதரித்தார் சண்முகசிகாமணிக் கவிராயருக்கும் சிவகாமசுந்தரி அம்மையாருக்கும் அருந்தவப் புதல்வனாக அவதரித்தார். தம் செல்வக்குழந்தை 5 ஆண்டுகள் ஊமையாக இருக்கக் கண்டு உள்ளம் வருந்தினர். செந்தூர் வேலவனை வேண்டிப் பாடுகிடந்தனர். இறையருளால் திருவாக்கு பெற்று "கந்தர்கலிவெண்பா" எனும் பக்திக் கவிமழை பொழிந்தார். மேலும் இவர் பல பக்திப் பனுவல்களை யாத்துள்ளார்.

பக்திச் சிறப்பு :

இப்பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவன் தமிழ்முருகனே இவர் பல்வேறு தெய்வங்களையும் பாடும் இயல்பினராயினும் தம்மை இளமையிலே ஆட்கொண்ட முருகக் கடவுளிடத்தே தனி அன்பு பூண்டவர். அவரையே வழிபடு கடவுளாகக் கொண்டவர். இக் கடவுள்மீது 2 - பிரபந்தங்கள் பாடியுள்ளார். முருகப் பெருமான் பரமசிவத்தினின்றும் வேறல்லர் என்னும் கொள்கையுடைய ஆசிரியர் அந்நிலையைப் பல இடங்களில் சுட்டிச் செல்கிறார்.

"மறைமுடிவில் நின்றுநிறை செல்வன்" (353)
"தனி முத்திக்கொரு வித்தே"
"அறிவுள்ளறிவை யறியுமாவரு மறிய வரிய பிரமமே" (409)
"அழியாத வீடுந்தரக் கடவன்" (416)

என்று குறிப்பிடுகிறார். முருகப்பெருமானின் முழுமுதல் தன்மையை, "தினகரபுரித் தேவதேவன்" (356) என்றும்

"செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள" (361)
"ஆதிப் பிரானென்று மும்முதற்
கடவுளு மடித்தொழும் பாற்ற" (365)
"முத்தேவா மிறைவரு முறை முறை
பணிய விருக்கு முதற்றேவே" (390)

" ஒருவ விருவ ரொரடுகை தொழுங் லுபய சரணன் (410)
" மூலமெ னக்குல நான்மறையோலிடு முழுதலே " (376)
" தினகர புரிவரு தனிமுதல் " (389)

என்றும் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

" ஒழியாத புவனத் துயிர்க்குயிர தாய்நிற்ப
தொருதெய்வ முண்டென வெடுத்
துரையா லுணர்த்துவதை யொழிய வெவரெவர்கட்கு
மூன்கண் ணுளக் கண்ணதாம்
விழியாக முன்னின்று தண்ணளி சுரந்தவர்கள்
வேண்டிய வரங் கொடுப்பான்
மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் லாற்புவியில்
வேறில்லை " (416)

என்ற பாடலின் மூலம் இவருக்கு முருகப்பெருமானிடத்துள்ள முறுகிய பக்தி புலனாகின்றது.

" என்னுயிர்க் கொக்கு மிளஞ்சேய் " — என்று முருகனை பாராட்டுவதால் இக்கடவுளை இவர் மறப்பினு[illegible]வர் நாமறவாது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

## நூலின் கற்பனைச் சிறப்பு :

செந்தமிழ்ப் புலமையும் செந்திலாண்டவன் திருவருளும் கூடப் பெற்ற குமரகுருபரர் தமது நூலில் கற்பனை, சொல்லாட்சி அணிகள், புராணங்கள் முதலானவற்றை அமைத்துப் பாடியுள்ளார். அவரது கற்பனை ஊற்றுக்குச் சில உதாரணங்கள்

1 புனல் நாட்டுப் புள்ளூரின் விளைவரு வியன் கழனி இன்சுவை முதிர்ந்த தெய்வமணம் வீசுகின்றது கவிஞருக்கு. அதற்குச் காரணமாக ஆசிரியர் கூறும் கற்பனை சுவைமிக்கதாக உள்ளது.

" நுண்ணிடை மகளிர் குரவைப் பாட்டைத் தம் யாழினும் இனிய மொழியால் இசைக்கின்றனர். அக்குரல் ஒலிக்கு அஞ்சிய வாளைமீன்கள் முகில் குழாத்தைக் கிழித்து விண்முட்டப் பாய்ந்து எழுந்து தெய்வ உலகத்தே உள்ள ஈன்றணிமையுடைய ஆவின் மடியை முட்டின. அப்பசு தன் அன்பிற்குரிய ஆண்கன்று பசியால் முட்டுகின்றது எனக்கருதிப் பெரியமடிதிறந்து மடைவழி, நீர் செல்வது போலப் பாலைச்சுரந்தது. அத்தீம்பால் கற்பக மலரின் தேனருவியோடு கலந்து தண்புனல் நன்னாட்டு ஏரிகுளங்

களிலும் நிறைந்துள்ளது. எனவேதான் புன்னூர் செந்நெல் கழனிக ளெல்லாம் தெய்வமணம் கமழ்கிறது." எனத் தனது கற்பனை வளத்தால் காரணம் கற்பிக்கிறார் குமரகுருபரர். அப்பாடல்

"......................
கொடியிடைக் கடைசியர் குழாம்
குரவையிடு துழனியிற் கொண்டறிரை யத்தாவு
குழவுப் பகட்டு வாளை
சேடுபடு புத்தே ணிலத்துப் புனிற்றிளஞ்
சேதா வயிற்றுமுட்டச்
செங்கன் றெனத்தடவு மடிமடை திறந்தூற்று
தீம்பால் சினைக்கற்பகத்
தேடுபடு தடமலர்த் தேனருவி யொடுசொரிந்
தேரியொடு காவிரம்ய
இழுதுபடு கழனியுந் தெய்வமண நாறவேள்
றின்சுவை முதிர்ந்து விளையும்" — என்பதாம்.

சிவபெருமான் சடைமேலுள்ள சந்திரன் அன்னப் பறவையின் உருவெடுத்தும் அச்சடா முடியை அடையமுடியாத பிரமதேவரை நோக்கி நகைக்கும் நகையையே இவ்வுலகம் அறியாமையால் நிலவென்று சொல்கிறது, இக்கருத்திலும் கற்பனை வெள்ளம் பெருகிவரக் காண்கிறோம். இங்ஙனம் இந்நூல் முழுவதும் கற்பனை வளம் சிறந்தோங்கிக் காணப்படுகிறது.

**சொல்லாட்சி நயம் :-**

அடிகள் இளமையிலேயே இறையருள் பெற்றுத் துறவு மேற் கொண்டாராயினும் உலகியல் அறிவு மிகுதியும் பெற்றிருந்தார் என்பதை அவரது சொல்லாட்சித் திறத்தால் அறியலாம்.

கட்டு, பிடி, சிறுகுறும்பு என்னும் உலகவழக்குச் சொற்களை யும், சீதனக்காணி என்னும் அரிய உலகியல் வழக்கையும் எடுத் தாளுகிறார், முருகக்கடவுள் உலகின் அனைத்துப்பொருளையும் தன்னை வழிபட்டோருக்கு உவப்புடன் நல்கித் தான்மட்டும் தன் மாமன் தனக்குச் சீதனக் காணியாக வழங்கிய குன்று களிலும், மலைகளிலும், தினைப்புனங்களிலும் வசிக்கின்றார் என்ற சுவையான நிகழ்ச்சியைக் குறிப்பிடும் முகமாக அடிகள் சீதனக் காணி என்ற சொல்லை நயம்பட எடுத்தாளுகின்றார்.

"காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்

பேதமை எல்லாந்தரும் " — என்ற திருக்குறளின் எடுத்தாண்டுள்ள காதன்மை என்ற சொல்லுக்கு வெகுளி, அன்புடைமை என்று பொருள் கூறுவர் உரையாசிரியர்கள். இவ்வரிய சொல்லை குமரகுருபர அடிகள்,

" மெய்வைத்த காதன்மை அரமகளிர் பேராய
வெள்ளந் திளைத்தாடி " (95)

என்ற இடத்தில் அன்புடைமை என்ற பொருளில் எடுத்தாண்டுள்ளார்.

**வரலாற்று செய்திகள் :-**

குமரகுருபர அடிகள் இறையுணர்வு மிகுதியாகப் பெற்றவராகையால் தமது நூலின்கண் ஆங்காங்கே இறைவனோடு தொடர்புடைய புராண வரலாறுகளைக் குறித்துச் செல்கிறார். அவற்றுள் சில :-

1 பிரமன் பிரவணப் பொருளறியாது சிறைப்பட்டது: இவ்வரலாற்றை,

" ............... சாற்றிய
செழும றைப்பொருளி னுரைவிரித்துமெனும்
வேதா முடித்தலை மோதுகைக் காய்ப்பொடு
திருவ டித்துணையென் முடிப தித்தவரு
ஆருத மெய்ப்புக ழாளியை "

எனக் குறித்துச் செல்கிறார்.

2. தலைச் சங்கத்தினை முருகன் தலைமை தாங்கி நடத்தியது:
இதனைக் குமரகுருபரர்,

"............ தலைச்சங்கம் வைத்துத் தாற்றிய
சடாயுபு ரத்தருங் கந்தன்"

எனச் சுட்டுகிறார்.

3 முருகன் வள்ளியைக் களவொழுக்கத்தாலும், தெய்வயானையைக் கற்பொழுக்கத்தாலும் மணந்து கொண்டதும் இதனை அடிகள்,

"............ முதிர் கிழக்கோல மாய்க்குற
மடந்தைமு னடந்து மற்றத்
திருக்கோல முடனொரு மணக்கோல மானவன் " என்றும்
" மடப்பிடியை வானவில்லிக்
குழைக்குந் தடக்கைத் திருத்தாதை சீரொடு

கொடுப்பக் குடங்கை யேற்றிக்
கொழுமலர் மணங்கமழ் மணப்பந்தர் நிற்ப ”
என்றும் குறிப்பிட்டுள்ளார்.

4 திரு உத்தரகோச மங்கையில் சிவபெருமான் உமையம்மைக்கு உபதேசம் செய்தருளுங்கால் முருகப்பிரான் உமையம்மையின் பூங்குழலில் வண்டாய் இருந்து கேட்டது: இதனை அடிகள்,

“ ............ யெந்தாயின்
கொங்கலர் மைக்குழல் வாழ் பொறி வண்டே”
என்று குறிக்கிறார்,

5 சகரரால் கடல் தோண்டப்பட்ட செய்தியை
“ கிளைக்குஞ் சகரர் தொட்டபெருங்
கிடங்கென் றிடங்கர் மாவியங்கும் ”
என்ற அடிகளில் விளம்பியுள்ளார்.

6 இறைவன் உமையொரு பாகனாக வீற்றிருக்கும் காட்சியை
“ ............ தம்பிரான்
தழலுருவி லொருபாதி குளிரவொரு புறநின்ற
தைய லுயகியும் வைத்து ” — என்பார் அடிகள்
மற்றும்பல புராணச் செய்திகளைப் பாடல்களில் கூறிப் பரவிச் செல்கிறார் குமரகுருபரர்.

சமய உண்மைகள் :-

இறைவனை அடைதற்குரிய நெறிகளே சமயங்களாகும். அவை ஒவ்வொன்றும் தாம் தாம் கூறும் நெறியே தலைமையான நெறி என்று கூறிக்கொள்ளவே விரும்புகின்றன. இதனையே மணிவாசகர்.
“ சமயவாதிகள் தத்தம் மதங்களே அமைவதாக அரற்றி மலைந்தனர் ”
என்பர். குமரகுருபரரும்,
“ தொன்னூற் பரசமயம் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து ”
என்ற தொடரால் விளக்குவார். இச்சமயப் பிணக்கினை அடிகள் கந்தபுரி வாழும் கடைசியர்களின் மூலம் விளக்குகிறார். அப்பாடல் வருமாறு :-

“ கந்தம் பொதிந்த செந்துவர்வாய்க்
கடைசி மகளிர் செந்நெலைப்பைங்

கன்ன லெனவுங் கன்னலைப்பூங்
கமுக மெனவுங் கடைக்கூடாத்
தத்தங் கருத்துக் கமைந்தபடி
சாற்றிச் சாற்றி முழுமாயச்
சலதி மூழ்கித் தடுமாறும்
சமயத் தவர்போற் றலைமயங்கும்

கடைசி மகளிர் செந்நெல்லைப் பசிய கரும்பு என்றும் கரும்பைப் பொலிவுள்ள கமுகு எனவும் தம் மனக்கருத்திற்கேற்ப மயங்க நினைக்கும் நிகழ்ச்சிக்கு மயக்கவுணர்வுக் கடலிலே அமிழ்ந்து தடுமாறுகிற பொய்ச்சமயவாதிகளை உவமையாகச் சுட்டுகிறார். இதனால் தத்தம் கருத்துக்கமைந்தபடி சாற்றுகின்ற சமயங்கள் எல்லாம் முடிவில் பயன்காணாது ஒழிகின்றன என்பதும், "இதுவாகும் அதுவல்லது" என்னும் பிணக்கம் நீங்கி நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்திலே காணநிற்பதொரு சமயம் சைவ சமயமே" என்பதும் விளங்கும்.

பிறசமயங்களைவிட அவற்றிற்கு மேலான சமயம் எனக் கூறப்படுவது சைவசமயமே. ஆதலால்தான் அவ்வச் சமயத்தவர்கள் இயற்றும் வழிபாடுகள் எல்லாம் இறுதியில் சிவபெருமானையே வந்து சேர்கின்றன என்பதைச் சிவஞான சித்தியர்

"யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவர்"

என்பார். இதனை அடிகள்

உள்ளக் கருத்தாற் பிறிதொன்றை
உண்மைப் பொருளென் றுள்ளவுந்தம்
உணர்விற் றெய்வங் கடைக்கூட்ட
உறுதி கிடைத்த படிபோலும்"

என்று குறிக்கிறார்.

இறைவனது திருமேனியை உருவென்றும், அருவென்றும், அருஉரு என்றும் கூறுவர். இம்முத்திருமேனிகளையும் இறைவன் எடுப்பது உயிர்களின் கருமேனியை அழிப்பதற்கேயாகும். இதனால் இறைவனின் பேரருள் பெருமையினை அறிகிறோம். இதனை

"செப்பிய மூன்றும் நந்தம் கருமேனி கழிக்க
வந்த கருணையின் வடிவுதானே"

என்று அருள்நந்தி சிவாச்சாரியார் அவர்களும்,

"அருவென்ன உருவென்ன அன்றென்ன நின்றவனொடு
அம்புலீ யாடவாவே"

என்று குமரகுருபரரும் குறிப்பிட்டுள்ளார்.

பற்றற்ற யோகியர்கள் இறைவனது திருவடியை அடையுங்கால் அவனது திருச்சிலம் போசையைக் கேட்பர். இதனை,

திருச்சிலம் போசை ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென் றுந்தீபற
நேர்பட அங்கேநின் றுந்தீபற என்னும் திருவுந்தியாரால்

அறியலாம். இதனை அடிகள்

"பரநாதத்தொலி யெனவனுபூதி
பாலித்தவர் செக்குருக
.................. முழக்குக சிறுபறையே (87)

என்று குறித்துள்ளார். இங்ஙனம் சமயம் வாய்க்கும்போது எல்லாச் சமய உண்மைகளையும் குறித்துச் செல்வது இவரது இயல்பாகும்.

## நூலின் தனிச் சிறப்பு :-

இந்நூலில் காவிரியாயும் தன்புனல் நன்னாட்டு புள்ளிருக்கு வேளூரின் நீர்வளம், நிலவளம், பயிர்வளம் என்பனவும் செல்வம் கொழிக்கும் மாடமாளிகைகளும், கூடகோபுரங்களும் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. முருகப்பெருமானைத் தமிழோடு இயைபு படுத்திக் கூறுவதோடு பலசைவ சித்தாந்தக் கருத்துக்களையும், புராணவரலாறுகளையும், பல இடங்களில் அடிகள் அழகுறக் குறித்துள்ளார். "குமரகுருபரரிடம் முருகவேள் அர்ச்சகர் வடிவில் தோன்றி அருள்பாலித்துத் தன்னைப்பற்றிப் பிள்ளைத்தமிழ் பாடுக" என்று கேட்டுக்கொண்டார் என்பதன் மூலம் இந்நூலின் உயர் தனிச் சிறப்பையும், ஆசிரியரின் பக்தித்திறத்தையும் நன்கறியலாம். மேலும் முருகக்கடவுளை "உலகு குளிரவெமது மதியின் ஒழுகு அமுத கிரணமே" என்று அடிகள் கூறுவதால் இப்பிள்ளைத்தமிழ் தீஞ்சுவை கனிந்த சொற்களால் வடிக்கப் பட்டுள்ளமையை அறியலாம்.

## முடிவுரை :-

இதுகாறும் கூறப்பட்ட செய்திகளால் பிள்ளைத்தமிழைப் பற்றியும், அதன் அமைப்பையும் அறிகிறோம். மேலும் முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழின் பெருஞ்சிறப்பால் ஒருசிறு துளிகளாக கற்பனை, சொல்லாட்சி, புராணம் முதலியவற்றில் சிலவற்றைக் கண்டோம். தோண்டத் தோண்டச் சுவையூறும் இப்பிள்ளைத்தமிழின் பெருமைகள் அளவிடற்கரியன.

300 th Anniversary of

# SRI KUMARAGURUPARAR

Saint Kumaraguruparar composed 14 literary pieces, chief among them being Kandar Kali Venba, Needi Neri Villakkam, Meenakshi Ammai pillai Thamizh, Madurai Kalambagam, Muthukumaraswamy Pillai Thamizh and Sakalakalavalli Maalai For Pillai Thamizh pieces his compositions laid the basis. He established the beauty of the Tamil language in his Chidambara Seiutkovai

He achieved immortal fame by composing Needi Neri Villakkam, whichis considered to be the essence of Tirukkural. In all his compositions he established strongly Saivite and Tamil jnstice.

For the first 5 years after birth, he was dumb and by the grace of Tiruchendur Murugan, he got the power of speech and sang the Kandar Kalivenba known as a midget Kandapuranam. It is the essence of Siddantha Sasthram. It is also considered to be a prayer cum sastram piece. Pandara Mummani Kovai explains in a simple way Siddantha Sastra. Sakala kalavalli Maalai is another poem on his ascent Sara swathy, the Goddess of learning.

He got his initiation known as Gnana Upadesam under the 4th Maha Sannidhanam of Dharmapuram Adhinam Sri La Sri Masilamani Desika Swamigal. He sang the Pandara Mumnai kovai in praise of his Guru and Master. He has praised the disciples of this Mutt in many of his writings. He travelled to the famous shrines at Tiruchendur, Madurai, Tiruvarur, Vaitheeswarankoil, Chidambaram and Varanasi - Kasi and sang in praise of the presiding deities there. So in all aspects of worship known as Guru Linga Vazhipadu (worship) he stood foremost.

He was the first recluse from south India to go to North India and in Hindi Language he propagated the richness of Tamil Language. This shows clearly that he was the first saint who foresaw the National Integration.

To establish a Mutt at Varanasi (Kasi) the Muslim Prince son of Aurangazeb gave him extensive lands and sites. The first five Swamijis stayed at Kasi and the 6th one, Sri Thillai Nayaka Swamigal came to TIRUPANANDAL and founded the Mutt here. Mahratta King Serfoji helped him to a great extent to establish the Mutt. It can be said that Saint Kumaraguruparar and his descendents were really responsible for National Integration.

Our Father of theNation Mahatma Gandhiji when he was in south Africa taught Tamil, Gujarathi, and Urudu to the people and children ofthe Indian oringin by establishing schools. It is said that he very much appreciated Kumaraguruparar's Needi Neri Villakkam (Pathway to Justice) and taught it to the children there(?). This is another example to show that Kumara

guruparar's philosophy attracted one and all. "Wealth is nothing but the fullness of thought" is the philosophy of the saint.

In Varanasi, Kumaraguruparar established the KUMARASWAMY MUTT and gave lectures daily. He was well versed in Hindi due to the gift of Goddess Saraswathy, and so he gave his lectures only in that language to be understood by the people there, His lectures were like honey and sweetened the ears of the listeners! He spoke about Tamil literature, Puranas, Sthothras and also Kamba Ramayana. Saint Tulasi Das happened to hear these speeches and included many of Kambar's ideas in his Tulsi Ramayana not found in Valmiki Ramayana.

In Tamil Nadu Sri Kasi Mutt was established as the branch Mutt of Sri Kumaraswamy Mutt at Varanasi by Sri Tillainayaka Swamigal. With the head Mutt at Kasi, branch Mutts were opened at Rameswaram, Chidambaram, Aachiramam, Tiruchendur, Srivaikuntam, Paingattur and other places.

In the 18th and 19th centuries, the pilgrims going from the south to North India, can pay the money at Tirupanandal and get it at Kasi Mutt Varanasi, So this Mutt is the first one to introduce the Draft system when the banks were not there.

The Swamijis from the 6th accession onwards were living like Raja Rishis and were instrumental in guiding the Maharatta Kings of Tanjavur and made them establish many endowments.

The 19th Head of the Mutt Sri Swaminatha Swamigal founded the King George V memerial prize for Tamil. In Annamalai University Tanjai Raja Raja Abhayakula Sekaran memorial Siddantha prize was endowed. Endowments were established for awarding prizes in Tamil grammar and THIRUMURAIS. The religious publications are printed and given at one fourth the cost price.

The 20th Swamiji popularly known as SRI ARULNANDHI MUNIVAR established 533 endowments for the propagation of Saivite culture, temple renovations, and National causes running to many crores of rupees.

The present Head of the Mutt the 21st in the Holy line well known as KAILAI MAMUNIVAR SRI-LA-SRI KASIVASI MUTHUKUMARA SWAMY TAMBIRAN SWAMIGAL AVERGAL, is managing efficiently the endowments established by his Gurus and predecessors. He has also made fresh endowments. He is the only Swamiji to have had the Dharshan of Mount Kailas, in this Mutt. Every year he makes it a point to visit Kedaram Kasi and other holy shrines of North India.

For the propagation of Tamil literature, there is the Swaminatha Swamigal Senthamizh Kallori (College) at Tirupanandal, which imparts courses in B. Lit. M. A., M. Phil, Ph. D., B. A. (Music) and other courses affiliated to Bharathi Dasan University. Shortly Computer Course and Banking course etc will be started.

In Tirunelveli District at Srivaikuntam there is an arts college in memory of Sri Kumaragurupara

Swamigal. In this college there are B. A., B. Sc., B. Com., M. A., M. Sc. courses affiliated to Madurai Kamarajar University. There are courses for job oriented also.

Moreover Nursery school for Children, Matriculation school and other educational institutions are functioning. At Tirulokki and Tirupanandal there are schools named after Sri Kumaraguruparar.

At Srivaikuntam a high school in the name of Sri Kumaraguparar and at Tirupanandal in the name of Kailai Maha Sannidhanam of Dharmapuram are functioning. Rs. 1500/- is given as a prize amount for any student who stands first in the final examination of B.lit. out of the endowment established by this Mutt.

Coming to the temple endowments there are many endowments for Lighting Lamps, for Singing Thevara Hymns, for propaganda lectures, for making Inscrip tion Stones on Thevarams etc. Kasi Mutt takes part in other religious activities like temple Kumbhabhishegams etc.

The Kasi Mutt has brought out many publications in Tamil, English and Hindi. Some are through the Annamalai University. There are endowments for hospitals, Cow protection, relief works, Maternity hospitals, helping poor students for education, marriages and even funeral rites in deserving cases.

It must be specially mentioned here that Kasi Mutt is noted for ANNA DHAANAM, feeding on

Festival occasions from Kanya Kumari to Kasi particularly on the Guru Pujah day of Saint Kumaragupara Swamigal.

For the propagation of Saivism the Mutt has endowments for Perjapuraam, Tiruvilayadal puranam, Kanda puranam the three major works in Saivlte literature. Lectures in Tiruvachakam are conducted. In the Benares Hindu Universiy there is a chair for Saiva Siddhantam.

Now the 300th Anniversary of the founder of the Mutt falls in MAY 1988. His Holiness is very keen in celebrating it on a grand scale for one year. It has to be done on All India basis. In this connection a meeting was held at Dharmepuram Adhinam on 8-11-87 with His Holiness of Dharma puram Adhinam presiding. Many scholars were invited. A committee has been formed for this purpose with the Head of Dharmapuram Adhinam Sri La Sri Shanmuka Desika Gnanasambandha Paramacharya Swamigal as the Patron. Many scholars suggested the way in which the memory of Kumaraguparar should be revived and established.

Discussions for the establishment of Sub Committee in important towns of South India and also in major cities in North India too where Saiviles live now in large numbers.

It was proposed to approach the Government to release a Postage stamp of Kumaragurapar, to establish a Memorial for the saint at the headquarters of Tamil Nadu, publish many books and a prabhanda

Tirattu (Collections of his work), to request the Tamil Nadu Government to take up the celebration work, instal a statue where ever psosible and in particular at Kasi, and also to take a procession of the image of the Saint from Srivaikuntam, his birth place to Kasi, where the saint established the Mutt. The celebrations will be conducted from MAY 1988 to April 1989.

For further particulars one can write to the Secretary, Sri Kumaraguruparar 300th Anniversary Committee, Sri Kasi Mutt, Tirupanandal, (Tamil Nadu) 612 504.

| | |
|---|---|
| 126, Pattamngala Street | N. RAMAKRISHNA, |
| MAYILADUTURAI 609 001. | "Nandivada House" |

---

# ஆலயபூஜைப் படிக்காசு நிதி

## நன்கொடை அளித்த அன்பர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| திரு/திருமதி | முன் இருப்பு | ரூ 27070—00 |
| குடந்தை துர்க்காகுடில் அப்பு | | 5—00 |
| திண்டுக்கல் கிருஷ்ணமூர்த்தி | | 5—00 |
| உக்கரை கைலாசம் | | 5—00 |
| ஈரோடு V கிருஷ்ணமூர்த்தி | | 19—65 |
| வெள்ள கோவில் R C சாமிநாதசெட்டியார் | | 5—00 |
| சென்னை அய்யனாவரம் S பழனி | | 12—00 |
| | ஆக | ரூ 27121—65 |

| | | |
|---|---|---|
| தலச்சங்காடு ஸ்ரீ சங்காரண்யேஸ்வரர் ஆலயச் செலவு | ரூ | 90—00 |
| பாணாதுறை ஸ்ரீ பாணபுரீஸ்வரர் ஆலயச் செலவு | | 75—00 |
| திருந்து தேவன்குடி கற்கடேஸ்வரர் ஆலயச் செலவு | | 90—00 |
| சேங்கனூர் ஸ்ரீ சத்தியகிரீஸ்வரர் ஆலயச் செலவு | | 67—50 |
| திருவலம்புரம் வலம்புரிநாதர் ஆலயச் செலவு | | 100—00 |
| ஆக | ரூ | 422—50 |

# காற்றடிக்கும் போது விளக்கு ஏற்றலாமா ?

நெல்லை சிவமணி புலவர் ம. சிவசம்பு எம். ஏ.,

பாளையங்கோட்டை

ஊழ்வினைபற்றியும் முயற்சிபற்றியும் தவறான கருத்துக்கள் நாட்டில் காணப்படுகின்றன. கடவுள் நம்பிக்கை அற்றவர்கள் ஊழ்வினையே இல்லை என்று கூறுகிறார்கள். வாழ்க்கை முன்னேற முயற்சி வேண்டும் என்பவர்கள் அதைப்பற்றி விளக்கமாகப் பேசுவதில்லை. முயற்சி என்பது தேவைதானா? அது எப்படி இருக்க வேண்டும்? என்றெல்லாம் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கூறுகிறார்கள்.

சிறிது காற்று அடித்தாலும் அசைகின்ற தூயவிளக்கை, ஊழ்வினையின் உண்மையைத் தெரிவோம் என்றுகூறி. காற்று வேகமாக அடிக்கும்போது ஏற்றலாமா? அறிவுள்ள எவரும் ஏற்றமாட்டார். காற்று நிற்கும் சமயம் அறிந்து ஏற்றுவர். அப்படி ஏற்றும்பொழுது சிறிது காற்றுஅடித்து விளக்கு அணைந்து விட்டாலும் மீண்டும் மீண்டும் ஏற்றுவர். இது அறிவுடையார் செயலாகும். சிலர் காற்று அடிப்பதால் விளக்கு ஏற்றவே வேண்டாம் என்றும் கூறுவர். இவர்கள் மிகவும் ஆபத்தானவர்கள். ஊழ்வினைக்குப் பயந்து முயற்சியே வேண்டாம் என்று கூறுபவர்கள். ஊழ்வினையால் எவ்வளவு துன்பம் வந்து கொண்டே இருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு இன்பம் பெற அறிஞர்கள் முயன்று கொண்டே இருப்பர். அவர்கள் ஊழ்வினைப் படி நடக்கட்டும் என்றுகருதி முயற்சி செய்யாமல் இருக்கமாட்டார்கள். மேன்மேலும் முயன்று கொண்டே இருப்பார்கள்

முயலாது வைத்து முயற்(று) இன்மையாலே
உயலாகா ஊழ்த்திறத்த என்னார் — மயலாயும்
ஊற்றமில் தூவிளக்கம் ஊழ்உண்மை காண்டுமென்று
ஏற்றார் எறிகால் முகத்து.

நீதிநெறிவிளக்கம் —50.

## ஆயுள் சந்தா செலுத்தினல்

## ஓர் அன்பளிப்பு

ஸ்ரீ குமரகுருபரர் திங்களிதழுக்கு

ரூ. 125 ஆயுட் சந்தா செலுத்தினல்

ரூ. 55 மதிப்புள்ள

**கந்தர் கலிவெண்பா**

இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிய
அரிய பாராயண நூலாகிய கந்தர் கலிவெண்பா
பிரபல இசையறிஞர் சேலம்
டாக்டர் ஜெயலட்சுமி அவர்களின்
இனிய குரலிசையுடன் L. P இசைத்தட்டாக
வெளியிடப்பெற்றுள்ளது.

ஆயுள் சந்தா ரூ. 125 அனுப்புவோருக்கு இந்த இசைத்தட்டு ஒன்று அன்பளிப்பாக அளிக்கப்பெறும்.
அஞ்சல் செலவு ரூ. 9—00.

முன்னமேயே ஆயுட்சந்தா செலுத்தியவர்கள் ரூ 25-ம் அனுப்புகைச் செலவும் பணவிடை மூலம் அனுப்பி இசைத்தட்டைப் பெறலாம்.

'ஸ்ரீ குமரகுருபரர்'
பதிவு எண். T. N. / KMB / 12.

# ஸ்ரீ குமரகுருபரர்

சமய இலக்கியத் திங்கள் இதழ்

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | (உள்நாடு) | ரு 125-00 |
| ,, | (வெளிநாடு) | ரு 225-00 |
| ஆண்டுச்சந்தா | (உள்நாடு) | ரு 10-00 |
| ,, | (ஸ்ரீலங்கா) | ரூ. 13-00 |
| ,, | (வெளிநாடு) | ரூ. 15-00 |

M. O. அனுப்ப வேண்டிய முகவரி:
நிர்வாக ஆசிரியர். "ஸ்ரீகுமர குருபரர்"
ஸ்ரீகாசிமடம், திருப்பனந்தாள். 612 504.

வெளியிடுபவரும் ஆசிரியரும்: ம. வே. பசுபதி
அச்சிடுபவர் தா. ம. வெள்ளைவாரணம்.
ஸ்ரீகுமரகுருபரர் அச்சகம், ஸ்ரீ காசிமடம், திருப்பனந்தாள்.

Posted at Sub-Post Office at Tiruppanandal
612504

Licence No. 01. Licensed to Post without Prepayment.

திரு.

ஏ. 67
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெஸண்ட் நகர்,
சென்னை — 600 090.